பக்கங்கள் 22

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆவணி 09 ஞாயிற்றுக்கிழமை 25.08.2024 | அதிர்வு 23

## இரண்டு வருடங்களில் சாதித்துக் காட்டினோம்

### ஜனாதிபதி ரணில் பெருமிதம்

“இரண்டு வருடங்களில் எந்த அரசும் செய்ய முடியாததை செய்தோம். அதுவே முன்னேற்றம்.”



07▶





# தமிழ் பொது வேட்பாளரை கைவிடுமா ரெலோ கட்சி?

## தென்னிலங்கை பிரதான வேட்பாளர்களுடன் தொடர்ந்து பேசுவோம் என்கின்றார் குருசாமி

(கே.வசந்தன்)

“தமிழ்ப் பொது வேட்பாளரால் தென்னிலங்கையின் பிரதான வேட்பாளர்களுக்குக் கடும் அழுத்தம் ஏற்பட்டுள்ளது. இதனால் தொடர்ச்சியாகப் பேச்சு வார்த்தைக்கு அழைக்கின்றார்கள். நாம் அவர்களுடன் பேசுவோம்.”

- இவ்வாறு தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) ஊடகப் பேச்சாளர் சுரேன் குருசாமி தெரிவித்தார்.



C5▶

## தமிழ்ப் பொது வேட்பாளரை முற்றுமுழுதாக எதிர்க்கிறேன்

### சுமந்திரன் எம்.பி. திட்டவட்டம்



(ந.லோகதயாளன்)

“தமிழ்ப் பொது வேட்பாளர் விவகாரம் எமது மக்களிடம் எஞ்சியுள்ள இருப்பையும் கேள்விக்குறியாக்கும் செயற்பாடாகும். எனவே, தமிழ்ப் பொது வேட்பாளரை முற்றுமுழுதாக எதிர்க்கின்றேன்.”

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின்

C5▶





இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரமுகர் அரியநேத்திரன் கட்சியின் அனுமதியின்றி வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கட்டமைப்பின் சார்பில் தமிழ்ப் பொது வேட்பாளராகக் களம் இறங்கியமை தொடர்பில் அவரிடம் விளக்கம் கேட்டிருக்கின்றது தமிழரசுக் கட்சி.

அவருக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கையின் ஆரம்பம் அது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில் –

அவருக்கு ஆதரவாக கருத்து தெரிவித்து, பிரசார முஸ்தீபுகளை மேற்கொள்கின்றார் கட்சியின்

C5▶




# வடக்கு, கிழக்கை ஒருபோதும் இணைக்கவும் மாட்டோம்! காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்கவும் மாட்டோம்!!

## மொட்டு வேட்பாளர் நாமல் மீண்டும் திட்டவட்டமாகத் தெரிவிப்பு

எமது அரசின் கீழ் வடக்கு, கிழக்குக்குக் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படாது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ மீண்டும் அறிவித்துள்ளார்.

சமூக ஊடகங்கள் வாயிலாக இடம்பெற்ற நேர்காணல் ஒன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாட்டில் இடம்பெற்ற 30 வருட கால யுத்தத்தை 3 வருடங்களில் நாம் முடிவுக்குக் கொண்டு வந்தோம். போர் நிறுத்த உடன்படிக்கையை மேற்கொண்ட அரசும் எமது நாட்டில் உள்ளது. யுத்தம், வெற்றி கொள்ளப்படும் எனத் தெரிவித்த அரசும் நாட்டில் உள்ளது.

விசேடமாகக் காணி, பொலிஸ் அதிகாரங்கள் உள்ளிட்ட அதிகார பரவலாக்கலை எந்தவொரு அரசும் முன்னெடுக்கவில்லை.

நாம் 13 பிளஸைக் கொண்டு வந்தோம், தேர்தலையும் நடத்தினோம். எட்டு ஜனாதிபதிகளும் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வழங்கவில்லை.

இந்தநிலையில் அடுத்துவரும், ஜனாதிபதியும் அதனைக் கொடுப்பதாக வாக்குறுதி அளித்தாலும், அவராலும் அவற்றை வழங்க முடியாது.

எனவே, வடக்கு – கிழக்கு இணைவு, காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை எமது அரசும் வழங்காது.”– என்றார்.












# இலங்கை எரிசக்தி - விவசாயத் துறையில் முதலீடு செய்ய தென்கொரியா இணக்கம்

இலங்கையின் எரிசக்தி மற்றும் விவசாயத் துறையில் முதலீடு செய்வதற்குத் தென்கொரியா இணக்கம் தெரிவித்துள்ளது.

தென்கொரிய மக்கள் குடியரசின் முன்னணி தொழில் முயற்சியாளர் ஒருவருக்கும் பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் இடையில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற சந்திப்பின்போதே இது குறித்து கலந்துரையாடப்பட்டது.

மீன்பிடி, சுகாதாரம் மற்றும் நிர்மாணத் துறைகளில் உற்பத்தியை அதிகரிக்கப் பயன்படும் புதிய தொழில்நுட்பத்தில் சாத்தியமான முதலீடுகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டன.



# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு


இலங்கையில் நிலவும் சீரற்ற கால நிலை காரணமாக டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது எனத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.



ஆகஸ்ட் மாதத்தில் 2 ஆயிரத்து 400 இற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

மேல் மாகாணம் மற்றும் கண்டி மாவட்டத்திலேயே அதிகளவான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

# முன்னாள் அமைச்சர் ருக்மன் காலமானார்



முன்னாள் அமைச்சர் ருக்மன் சேனாநாயக்க தனது 76 ஆவது வயதில் நேற்று காலமானார்.

இலங்கையின் முதல் பிரதமரான டி.எஸ்.சேனநாயக்காவின் பேரனான இவர், 2002 ஆம் ஆண்டு முதல் இரண்டு வருடங்கள் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சராகப் பதவி வகித்திருந்தார்.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் மற்றும் உப தலைவர் ஆகிய பதவிகளையும் அவர் வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# மரக்கறிகளின் விலை உயர்வு

கடந்த நாள்களை விட தற்போது மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளது.

இதன்படி பேலியகொடை மெனிங் சந்தையில் ஒரு கிலோகிராம் கரட் 250 ரூபாவாகவும், ஒரு கிலோகிராம் போஞ்சி 250 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

அத்துடன், ஒரு கிலோ கிராம் கோவா 150 ரூபாவுக்கும், ஒரு கிலோ கிராம் தக்காளி 150 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

## கிளப் வசந்த கொலைச் சம்பவம்:

# மூன்று சந்தேகநபர்களைத் தடுப்புக் காவலில் 72 மணிநேரம் வைத்து விசாரிக்க அனுமதி!

கிளப் வசந்த எனப்படும் சுரேந்திர வசந்த பெரேரா உட்பட இருவரின் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள துப்பாக்கிதாரி உள்ளிட்ட மூவரை 72 மணிநேரம் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது என்று பொலிஸார் அறிவித்துள்ளனர்.



தெஹிவளை – கௌடான பகுதியில் வைத்து பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட துப்பாக்கிதாரி அ/ஹங்கல்ல பகுதியைச் சேர்ந்த 31 வயதுடையவர் என்றும், அவர் முன்னாள் இராணுவச் சிப்பாய் என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.




# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## இரகசியம் பரகசியம்...

நாடாளுமன்ற உறுப்பினரான சிவஞானம் சிறிதரன்.

இதேசமயம் 'தமிழ்ப் பொது வேட்பாளர் மூலம் தமிழர்களின் சட்ட பூர்வமான அபிலாசைகளை சர்வதேசத்திற்கு முன்கொண்டு செல்வோம்' என்ற ஏற்பாட்டில் வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும் கருத்தரங்கில் பிரதான கருத்துரை வழங்குவதற்காக தமிழரசுக் கட்சியின் எம்.பிக்களான சிறிதரனும், சார்ள்ஸ் நிர்மலநாதனும் லண்டன் செல்கின்றனர்.

அரியநேத்திரனிடம் விளக்கம் கேட்டிருக்கும் கட்சி சிறிதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் விடயத்தில் என்ன செய்யப் போகின்றது?

பொறுத்திருந்து பார்ப்போம்.

* * *

தமிழ்ப் பொதுக் கட்டமைப்பு இந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தியுள்ளது.

ஆனால் இந்தத் தேர்தல் முடிவடையும் வரையாவது பொதுக் கட்டமைப்பு கட்டுக்குலையாமல் தாக்குப் பிடிக்குமா என்ற கேள்வி பல வட்டாரங்களிலும் எழாமல் இல்லை.

பொதுக் கட்டமைப்பில் இடம்பெறும் ஐந்து கட்சிகளின் கூட்டமைப்பான ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணி இன்று காலை வவுனியாவில் கூடுகின்றது.

இன்று மாலையில் தமிழ் பொதுக் கட்டமைப்பின் கூட்டம் நடைபெறலாம் என்று தெரிகின்றது.

பொதுக் கட்டமைப்பில் தொடர்ந்து நீடித்துப் பிரசாரத்தில் ஈடுபடுவதா என்பது குறித்து ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் கட்சிகள் இந்த வாரத்தில் முடிவெடுக்கலாம் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன. தீர்க்கமான முடிவு ஒன்று விரைவில் எட்டப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தினாலும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்கள் அனைவருடனும் தொடர்ந்து பேச வேண்டும் என்று கூட்டமைப்பில் உள்ள கட்சிகள் சில எடுத்துள்ள நிலைப்பாடு, தேவைப்பட்டால் பொது வேட்பாளர் ஒழுங்கை இடையில் 'கட்' பண்ணிவிடும் எதிர்பார்ப்புக்கான ஆயத்தமா என்று சில விடயம் அறிந்த வட்டாரங்கள் கேட்கின்றன.

ஓரிரு வாரங்களில் விவகாரம் தெளிவான கட்டத்தை எட்டும் என்று எதிர்பார்க்கலாம்.

## தமிழ் பொது வேட்பாளரை...

வவுனியா, மூன்றுமுறிப்பு பகுதியில் உள்ள விருந்தினர் விடுதியொன்றில் நேற்று நடைபெற்ற தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் மத்திய குழுக் கூட்டத்தின் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் சம்பந்தமான விடயங்களை எவ்வாறு முன்னெடுப்பது தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது. எமது தமிழ்ப் பொது வேட்பாளரின் பிரச்சார நடவடிக்கைகளை எவ்வாறு முன்னெடுப்பது என்பது பற்றி ஆராய்ந்தோம்.

தமிழ்ப் பொது வேட்பாளர் களமிறக்கப்பட்டதால் தென்பகுதியில் ஏற்படுகின்ற அழுத்தங்களின் பிரகாரம் தென்பகுதியின் பிரதான வேட்பாளர்களிடம் இருந்து தொடர்ச்சியாகப் பேச்சுவார்த்தைகளுக்கான அழைப்புக்களும், கோரிக்கைகளும் வந்தவண்ணமுள்ளன. பேச்சுவார்த்தை சம்பந்தமான விடயங்களை நாங்கள் எப்படிக் கையாள்வது என்பது பற்றியும் ஆராயப்பட்டது. இது மிகவும் ஆக்கபூர்வமான சந்திப்பாக இடம்பெற்றது. நிறைய கருத்துக்கள் பரிமாற்றப்பட்டன. எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளரையும், அதே நேரம் வரும் பேச்சுவார்த்தைகளையும் எவ்வாறு கையாள்வது பற்றியதான அனுமதியையும், ஆலோசனைகளையும் மத்திய குழு வழங்கியுள்ளது.

அத்துடன், தமிழ்ப் பொது வேட்பாளரை நாம் கைவிடுவதற்கான சாத்தியம் இல்லை. ஆனால், எங்களுக்கு அழைக்கப்படுகின்ற பேச்சுவார்த்தைகளில் எமது மக்கள் எதற்காகத் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தினார்களோ அல்லது எந்த விடயங்களை நிறைவேற்ற வேண்டும் எனத் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தினமோ அந்தக் கோரிக்கைகள் அனைத்தையும் பிரதான வேட்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டியது எமது கடமை. அந்த விடயத்தை எப்படிக் கையாள வேண்டும் என்று முடிவு எடுத்துள்ளோம்.

தமிழ்ப் பொது வேட்பாளர் இல்லாத நிலையில் நடத்தப்படுகின்ற பேச்சுவார்த்தைகள் என்பது வலிந்து சென்று அவர்களிடம் கையேந்துவது போன்ற ஒரு நிலைமையை ஏற்படுத்தும். தமிழ்ப் பொது வேட்பாளரைக் களமிறக்கிய பின்னர் அவர்ககளுக்கு ஏற்பட்டிருக்கின்ற அழுத்தம் முக்கியமானது. தெற்கில் இருக்கக் கூடிய வாக்குகள் சமமாகப் பிரிந்து செல்கின்றபோது தமிழ்ப் பொது வேட்பாளருக்குத் தமிழ் மக்கள் அதிகபட்ச வாக்குகளை வழங்கினால் தங்களுக்கு இரண்டாவது கணக்கீட்டில் கூட வெற்றி இல்லாத நிலை வரலாம் என அவர்கள் உணர்கின்றார்கள்.

ஆகவே, தமிழ்ப் பொது வேட்பாளரைக் களமிறக்கிய பின் உறுதியான நிலமை இருக்கின்றது. அது வெற்றியளித்துள்ளது. இதற்குப் பின்னர் அவர்களுடைய அழைப்புக்கள் தொடர்ச்சியாக வருகின்றது. இதில் பலமான நிலையில் இருந்து எமது கோரிக்கைகளை முன்வைக்க முடியும் என்பது எங்களது நிலைப்பாடு.

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பான பல்வேறு விதமான கருத்துகள் நிலவுகின்றன. இருப்பினும் கட்சி எடுத்த பொது முடிவில்தான் நாம் பயணிக்கின்றோம். தமிழரசுக் கட்சியில் பலர் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்கள். பிரச்சார கூட்டங்களில் கூட கலந்துகொண்டுள்ளார்கள். காலப் போக்கில் எமக்குள் இந்த விடயத்தில் இருக்கும் முரண்பாடுகள் சீர்செய்யப்பட்டு அவர்களும் எங்களுடன் இணைந்து பயணிப்பார்கள் என நம்புகின்றோம்.

நாம் முன்வைக்கும் கோரிக்கைகைளை எவ்வளவு தூரம் அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்பதைப் பொறுத்துதான் இரண்டாவது விருப்பு வாக்கு தொடர்பில் தீர்மானிக்க முடியும்." – என்றார்.

ரெலோவின் நேற்றைய மத்திய குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன் (தலைவர்(, கோவிந்தம் கருணாகரன் (செயலாளர்), சுரேன் குருசாமி (பேச்சாளர்) உள்ளிட்ட மத்திய குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

## தமிழ்ப் பொது வேட்பாளரை...

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தேர்தலைப் பகிஷ்கரிப்பது அல்லது வெல்ல முடியாது என்பவருக்கு வாக்குகளைக் குவிப்பதன் மூலமாக எமது கையில் இருக்கும் அரசியல் ஆயுதத்தைப் பயன்படுத்தாமல் தூக்கி எறிவதற்கு ஒப்பானது. இது கேலிக்கூத்தானது.

இதேநேரம் ஒரு பொதுவான வேட்பாளர் என்ற தோற்றத்தை ஏற்படுத்திவிட்டு ஒரு சரிவைக் கண்டால் அதனால் தமிழ் மக்களின் எண்ணத்திலும் அது சரிவைத் தோற்றுவிக்கும். எமது கட்சியை விட வெளியே உள்ள ஒரு பேராசிரியர் இது அரசியல் தற்கொலைக்குச் சமனான விடயம் எனக் கூறியுள்ளார். இதன் மூலம் எமது மக்களிடம் எஞ்சியுள்ள இருப்பையும் கேள்விக்குறியாக்கும் செயற்பாடு என்பதனால் இதனை எதிர்க்கின்றேன்.

தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவில் 33 பேர் கலந்துகொண்டபோது மூவர் மட்டுமே பொது வேட்பாளருக்கு ஆதரவாகக் கருத்து தெரிவித்தனர். 15 பேர் அளவில் எதிரான கருத்தையே கொண்டிருந்தனர். அப்போது யார் வேட்பாளர் எனவும் தெரியாது. அடுத்த கூட்டத்தில் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவு இல்லை எனத் தீர்மானம் எடுக்க வேண்டாம் என அரியநேந்திரன் கோரினார். அதன்பின்னர் தமிழ்ப் பொது வேட்பாளராக அரியநேத்திரனின் பெயர் பிரேரிக்கப்பட்ட பின்பு இடம்பெற்ற கூட்டத்தில் அவரிடம் விளக்கம் கோரவும் கட்சியின் எந்தக் கூட்டத்துக்கும் வரக்கூடாது எனவும் தீர்மானமாக தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவில் நிறைவேற்றப்பட்டது.

அவ்வாறு ஒழுக்காற்று நடவடிக்கையின் ஆரம்பமாக விளக்கம் கோரப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் கட்சி யாரை ஆதரிப்பது என்ற முடிவை எடுக்கவில்லை. அனைவரினதும் தேர்தல் விஞ்ஞாபனம் வந்தபின்பு முடிவை எட்டலாம் என்ற தீர்மானத்தை சக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் முன்மொழிந்திருந்தார்.

இந்தநிலையில் தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிப்பவர்கள் தொடர்பில் கட்சியே தீர்மானிக்க வேண்டும்." – என்றார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## உள்ளூராட்சித் தேர்தல்கள் உடனடியாகச் சாத்தியமா?

நிலுவையில் இருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களையும் விரைந்து நடத்தி முடிக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அது பற்றிய தீர்மானங்களை எடுப்பதற்காக தேர்தல் ஆணைக்குழு விசேடமாக வரும் புதன்கிழமை 28ஆம் திகதி கூடுகின்றது.

உயர்நீதிமன்ற உத்தரவுப்படி இப்போது ஒன்றரை வருடங்கள் நிலுவையில் இருக்கும் இந்தத் தேர்தலை விரைந்து நடத்தி முடிப்பது சாத்தியமா என்று கேள்வி எழுகிறது.

இந்தத் தேர்தலை நடத்த முடியாமல் போன தவறுக்குக் காரணமானவர்களை இந்த விடயம் தொடர்பான தீர்ப்பில் உயர் நீதிமன்றம் சுட்டி - குத்தி - காட்டியிருக்கின்றது.

நிதி அமைச்சராகவும் செயல்படும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும், முன்னைய தேர்தல் ஆணைக்குழுவையும் இது விடயத்தில் வாக்காளர்களின் அடிப்படை உரிமைகளை மீறிய தரப்புகள் என அடையாளம் காட்டியிருந்தது நாட்டின் மீயுயர் நீதிமன்றம்.

உயர்நீதிமன்ற உத்தரவுப்படி இப்போதைய ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர் நிலுவையில் உள்ள உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை - தயாரிப்புகளை - தேர்தல் ஆணைக்குழு முன்னெடுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனாலும் அதை ஒப்பேற்றுவதில் பல சிக்கல்களை தேர்தல் ஆணைக்குழு எதிர்கொள்வது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

ஒன்றரை வருடங்களுக்கு முன்னைய வேட்புமனுக்களின் அடிப்படையில் இந்தத் தேர்தலை நடத்துவதற்கு எதிராக தேசிய ரீதியில் எதிர்ப்புக் கிளம்பும். சில தரப்புகள் நீதிமன்றத்திற்குப் போகும். அந்தச் சிக்கலைத் தேர்தல் ஆணைக்குழு தாண்ட வேண்டி இருக்கும்.

இந்த உள்ளூராட்சித் தேர்தலை முடக்கிய தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் நடக்கப்போகும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகின்றார். இந்த உள்ளூராட்சி தேர்தலை இனியும் தாமதம் இன்றி நடத்துவது தொடர்பில் சாதகமான மனநிலையைக் கொண்டிராத அவர் ஜனாதிபதி தேர்தலில் வெல்லலாம். அல்லது தோற்கலாம்.

அவர் தோற்று இன்னொருவர் ஜனாதிபதியானால் உடனடியாக நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு அதிக அளவு சாத்தியமுண்டு.

அப்படி ஜனாதிபதி தேர்தல் முடிந்த கையோடு தற்போதைய நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் பொதுத் தேர்தலை நடத்துவதா? அல்லது உயர் நீதிமன்ற தீர்ப்புப்படி நிலவையில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தி முடித்து, அதன் பின்னர் பொதுத் தேர்தலைக் கவனிப்பதா? அல்லது இரண்டையும் சேர்த்து ஒன்றாக நடத்துவதா? அதற்கான சாத்தியங்கள் உண்டா? - என்ற கேள்விகள் - சிக்கல்கள் - எழும்.

மறுபுறத்தில் ரணில் விக்ரமசிங்கவே மீண்டும் ஜனாதிபதியானால் அவர் நிலுவையில் உள்ள உள்ளூராட்சி தேர்தலை, தேர்தல் ஆணையம் முன்னுரிமை கொடுத்து நடத்த முற்படுவதற்கு ஒத்துழைத்து இடமளிப்பாரா என்ற கேள்வி எழும். ஏற்கனவே இது விடயத்தில் உயிர் நீதிமன்றத் தீர்ப்பு வெளியானதும் அதனை ஒட்டிக் காட்டமாக விமர்சனக் கருத்தை பொதுவெளியில் முன்வைத்தவர் ரணில் விக்கிரமசிங்க.

உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு முட்டுக்கட்டை போடுவதற்காகவே நாடாளுமன்றத்தைக் கலைத்து, இடையில் பொதுத் தேர்தலை அவர் நுழைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

உயர்நீதிமன்றத் தீர்ப்புக்குப் பின்னரும் இப்போது ஜனாதிபதி தேர்தலை அடுத்துப் பொதுத் தேர்தல், தொடர்ந்து மாகாண சபை தேர்தல்கள், உள்ளூராட்சி தேர்தல் என்று கருத்து வெளியிட்டவர் அவர்.

உள்ளூராட்சி தேர்தலில் எலக்ட்ரானிக் வாக்குப்பதிவு முறையை பகுதியளவில் அறிமுகப்படுத்துவது என்ற புதிய கயிற்றை இப்போது - இரண்டொரு நாள்களுக்கு முன்னர் - தமது பிரசார உரை ஒன்றில் அவர் அவிழ்த்துவிட்டிருக்கிறார். அதன்படி புதிய முறையின் நடைமுறையாக்கம் என்ற தலையீட்டின் மூலம் அவர் உள்ளூராட்சித் தேர்தலை இழுத்தடிக்க வைக்கலாம்.

இந்தத் தடைகளை எல்லாம் தாண்டி உள்ளூராட்சித் தேர்தல் விரைந்து நடந்து ஒப்பேறினால் நல்லது தான்.

# இரண்டு வருடங்களில் சாதித்துக் காட்டினோம்

## ஜனாதிபதி ரணில் பெருமிதம்



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மட்டக்களப்பு, கல்லடி சிவானந்தா தேசிய பாடசாலை விளையாட்டரங்கில் நேற்று முற்பகல் நடைபெற்ற மட்டக்களப்பு மாவட்ட 'இயலும் ஸ்ரீலங்கா' வெற்றிப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

இந்தப்பொதுக்கூட்டத்தில்மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டதுடன் ஜனாதிபதிக்கு பலத்த வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்த மேடையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு றோயல் கல்லூரியில் கற்பித்த ஆசிரியர் சிவலிங்கமும் கலந்துகொண்டிருந்தமை விசேட அம்சமாகும்.

இங்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் உரையாற்றுகையில்,

"இந்த மேடையில் எனக்கு றோயல் கல்லூரியில் கற்பித்த சிவலிங்கம் ஆசிரியர் இருக்கின்றார். 13 – 14 வயதில் அவரிடம் கல்வி கற்றேன். 1961 ஆம் ஆண்டுகளில் நானும் பிரதமர் தினேஷ் குணவர்தனவும் அவரிடம் கற்றிருக்கின்றோம். எனவே, நாட்டை மீட்டெடுத்த பெருமையை அவருக்கும் கொடுக்க வேண்டியது அவசியமாகும்.

முன்னாள் சபாநாயகர் அனுர பண்டாரநாயக்கவும் மலிக் சமரவிக்கிரமவும் சிவலிங்கம் ஆசிரியரிடம் கல்வி கற்றுள்ளனர். எதென்ஸ் சாம்ராஜ்ஜியத்தில் இளையோரின் எழுச்சி குறித்து ஆசிரியர் எங்களுக்கு கற்பித்தமை நினைவிருக்கின்றது. அச்சமடைந்த நாட்டுக்குள் மக்கள் நம்பிக்கை இழக்கும் வகையில் செயற்படக்கூடாது என்பதை வலியுறுத்தினார். அதனால்தான் 2022 ஆம் ஆண்டில் சவால் மிக்க தருணத்தில் எவரும் ஏற்காத நாட்டை நான் பொறுப்பேற்றேன்.

உங்களுக்காகப் போராடவும், உங்களுக்கு சலுகை வழங்கவும், அடுத்த தலைமுறைக்கு நல்ல எதிர்காலத்தை வழங்கவும், நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்கவும், நாட்டுக்குள் நிலைபேற்றுத் தன்மையை ஏற்படுத்தவும், நாட்டை சரியான பாதைக்கு கொண்டுச் செல்லவும் என்னால் தலைமைத்துவம் வழங்க முடிந்தது என்பதாலேயே 'இயலும் ஸ்ரீலங்கா' என்று சொல்கிறோம்.

கஷ்டமான காலத்தில் இந்த பொறுப்புக்களை நான் ஏற்றுக்கொண்டேன். எதிர்க்கட்சித் தலைவர் சஜித்துக்கு இந்த ஆசான் கிடைக்கவில்லை. அதனால்தான் சவால்களை ஏற்காமல் அவர் ஓடிவிட்டார். பெரிஸ் ஒலிம்பிக் வரையில் அவர் ஓடி முடித்தார். எதிர்க்கட்சித் தலைவர் மாற்றுப் பிரதமர் ஆவார். மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு அவரையும் சார்ந்துள்ளது.

ஆனால் மக்கள் கஷ்டப்படும் போது ஓடி மறைந்து கொண்டார். வரிசைகள் பற்றி யோசிக்கவில்லை, மக்கள் பசியை பற்றி சிந்திக்கவில்லை. அநுரகுமாரவும் ஓடி மறைந்து கொண்டார். ஆனால் அன்று இங்கு இருக்கும் அமைச்சர்கள் இருந்தனர். நாம் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடினோம். கஷ்டமான பல தீர்மானங்களை எடுக்க வேண்டியிருந்தது. உள்நாட்டு கடன் பெறுதல் வரையறுக்கப்பட்டது. பணம் அச்சிடுவது நிறுத்தப்பட்டது. செலவுகளைக் குறைத்து எதிர்கால நடவடிக்கைகளுக்கு வருமானம் தேட வற் வரியை அதிகரித்தோம்.

அவை இலகுவான பணியல்ல. அமைச்சரவையில் பல முறை பேசினோம். மக்கள் கஷ்டங்களை தாங்கிக்கொண்டமைக்கு நன்றி தெரிவிக்கின்றோம். 2022 ஆம் ஆண்டில் மொத்தத் தேசிய உற்பத்தி 13 டொலர் பில்லியன் சரிவைக் கண்டது. எவ்வாறாயினும் எமது முயற்சிகளால் 2023 இல் 8 பில்லியன் டொலர்களினால் மொத்த தேசிய உற்பத்தியை அதிகரித்தோம். இதனால் ரூபாயின் பெறுமதி அதிகரித்தது. அஸ்வெசும நலன்புரித் தொகை வழங்கினோம். இவ்வருடத்தில் 24 இலட்சம் பேருக்கு அஸ்வெசும வழங்கவுள்ளோம். சிறுநீரக நோயாளர்கள் மற்றும் வயோதிபர்களுக்கான கொடுப்பனவும் அதிகரிக்கப்பட்டது.

11 பில்லியன் ரூபா செலவில் இலவசமாக அரிசி வழங்கினோம். அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கினோம். அடுத்த வருடத்தில் அரச ஊழியர்களுக்கு உதய செனவிரத்ன அறிக்கையின்படி 25 ஆயிரம் ரூபா வாழ்க்கைச் செலவு கொடுப்பனவை வழங்குவோம். அதனால் அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம் 55 ஆயிரமாக அதிகரிக்கும். ஓய்வூதியம் பெறுவோருக்கும் 3000 ரூபா இடைக்கால கொடுப்பனவு வழங்கப்பட்டது. முதியோருக்கான நிலையான வைப்பு வட்டி வீதம் 10 ஆக அதிகரிக்கப்படும். மக்களுக்கு இலவச காணி உறுதிகளை வழங்குகின்றோம். 20 இலட்சம் பேர் இதனால் பயனடைவர். அடுக்குமாடிக் குடியிருப்பு வீட்டு உரிமைகளை மக்களுக்கு கொடுப்போம். பெருந்தோட்டங்கள் கிராமங்களாக மாற்றப்படும். 'உறுமய' வேலைத் திட்டத்திற்கு தனியான ஒரு ஆணைக்குழு அமைக்கப்படும். அதனால் அடுத்த மூன்று வருடங்களில் அந்த வேலைத்திட்டம் முழுமைப்படுத்தப்படும்.

2 வருடங்களில் எந்த அரசும் செய்ய முடியாததை செய்தோம். அதுவே முன்னேற்றம். 2022 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையில் சிவப்புப் பருப்பு விலை 41 ரூபாவினால் குறைந்துள்ளது. கோதுமை மா 29 ரூபாவினால் குறைந்துள்ளது. கோழி இறைச்சி விலை 11 சதவீதத்தினால் குறைந்திருக்கிறது. டீசல் 28 வீதமாக குறைந்துள்ளது. கேஸ் 31 சதவீதமாக குறைந்துள்ளது. டீசல் 450 ரூபாவில் இருந்து 318 ரூபாவாகக் குறைந்திருக்கிறது. குறைந்தபட்ச பஸ் கட்டணம் 40 இல் இருந்து 28 ரூபாய் வரையில் குறைந்துள்ளது. மக்களின் வாழ்க்கைச் சுமை குறைந்துள்ளது. அதனாலேயே சிலிண்டர் சின்னத்தை தெரிவு செய்தேன்.

ஆனால் மேலும் பல சலுகைகள் தேவைப்படுகின்றன. அதற்காக ரூபாவை வலுப்படுத்த வேண்டும். 2025 ஆம் ஆண்டில் அதனை செய்து அதிக சலுகைகளை வழங்குவோம். இன்னும் ஒரு வருடம் பாடுபட்டால் நல்ல பலன்களை அடையலாம். பொருட்களை அதிகளவில் இறக்குமதி செய்யலாம். மருந்து தட்டுப்பாட்டை குறைக்கலாம். பொருளாதாரம் மேம்படும். ஏற்றுமதித் துறை பலப்படும். சுற்றுலாத் துறை மேம்படும். வெருகல் – மட்டக்களப்பு வரையில் சுற்றுலா அபிவிருத்தி செய்யப்படும். சிறிய – பெரிய ஹோட்டல்கள் அமைக்கப்படும். கல்முனை – அருகம்பே வரையில் சுற்றுலாத்துறை பலப்படுத்தப்படும். இதனால் மக்களுக்கும் பல வாய்ப்புகள் உருவாகும்.

விவசாயம் நவீனமயப்படுத்தப்படும், மீன்பிடித்துறையும் நவீனமயப்படுத்தப்படும், வீடுகளின் வருமானம் அதிகரிக்கும், கல்குடாவை அபிவிருத்தி செய்வோம். அதனால் நாம் கடன் பெற்ற 18 தரப்பினருடன் வங்குரோத்து நிலையிலிருந்து மீள்வதற்கான ஒப்பந்தம் செய்துள்ளோம். கடன் மீளச் செலுத்த காலம் வழங்கியுள்ளனர். 10 பில்லியன் டொலர் கடன் சலுகை கிடைத்துள்ளது.

சஜித் இந்த முறையை மாற்றப் போவதாகச் சொல்கின்றார். இவற்றை மாற்றினால் சலுகைகள் நிறுத்தப்படும். ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடையும். 400 ரூபா வரையில் டொலரின் பெறுமதி அதிகரிக்கும். கேஸ் இருக்காது. நாட்டை வழிநடத்தும் முறை சஜித்துக்கு தெரியாது. நாம் அதற்கான முயற்சிகளை செய்த போதும் எமக்கு உதவ முன்வரவில்லை. உங்களுக்கு சலுகைகளை வழங்க முயற்சித்தோம். அதற்கிடையில் தேர்தல் நடத்தவில்லை என்று எனக்கெதிராக வழக்குத் தொடுத்தனர். தேர்தல் நடத்தியிருந்தால் அதற்கே 3 – 4 மாதங்களை செலவிட வேண்டியிருந்திருக்கும்.

2022 ஒவ்வொரு நொடியும் நாம் பாடுபட்டதாலேயே இன்றைய நிலை எட்டப்பட்டிருக்கிறது. எந்த ஒரு நாடும் இவ்வளவு சீக்கிரம் மீண்டு வந்ததில்லை. அதனைத் தடுப்பதே எதிர்க்கட்சியின் தேவையாகும். எனக்கு எதிரான நீதிமன்ற தீர்ப்பை பெற்றுள்ளனர். மக்களை வாழவைப்பது அடிப்படை உரிமை மீறல் என்று நான் நினைக்கவில்லை. மக்களுக்காக முன்வந்து கஷ்டப்பட நான் தயார். அடுத்த தலைமுறைக்கு சுபீட்சமான எதிர்காலத்தை உருவாக்குவதே எனது தேவையாகும்.

எனவே, தேர்தலில் அவர்களை துடைத்தெறியுங்கள். நாம் ஒற்றுமையாக முன்னேறுவோம். நாட்டையும் முன்னேற்றுவோம். சிறந்ததொரு எதிர்காலத்தை நான் உருவாக்குவேன். 2019 ஆம் ஆண்டில் இருந்ததை விடவும் நல்ல நிலையை உருவாக்குவேன். எதிர்காலத்தைப் பாதுகாக்க முன்வாருங்கள். செப்டெம்பர் 21 ஆம் திகதி சிலிண்டருக்கு வாக்களியுங்கள். இல்லாவிட்டால் சிலிண்டர் இன்றி அல்லல்பட நேரிடும்." – என்றார்.





# தடுமாறும் பொது வேட்பாளரும் தடம் புரளும் தமிழரசுக் கட்சியும்

நேற்றைய தினம் தொலைபேசியில் உரையாடிய தமிழரசு கட்சியின் மூத்த உறுப்பினர் பொலிகண்டியில் தமிழ்ப் பொது வேட்பாளரின் ஆரம்ப பரப்புரையில் குறைந்தபட்சம் பத்து நபர்களைக் கூட காணவில்லை என மிகவும் வேதனைப்பட்டார். தனக்கு தொலைக்காட்சியில் பார்க்கும் போது கவலையாக இருந்ததாகவும் தெரிவித்தார். தானடாவிட்டாலும் தன் தசையாடும் என்பது போல் வேட்பாளரும் தமிழரசு கட்சிக்காரர் அல்லவா? 'தேசமாகத் திரள்வோம்!' எனும் கோசத்தை முன்னிறுத்தியவர்கள் பரப்புரைக்கு தொண்டர்களை அணி திரட்டக்கூடிய வலிமையற்றவர்களாகவே காணப்படுகிறார்கள். இதைத்தான் பலமுறை பத்திகளிலே எழுதி இருந்தோம். சிவில் சமூகம் என்ற பெயரிலே ஏழு பிரமுகர்களும் பெயரளவிலே ஏழு கட்சிகளும் அதில் மூன்று கட்சி எப்போது விலகும் என்று தெரியாமல் கொழும்பு விசுவாசத்தோடு இரட்டை வேடம் போடுகிறார்கள். இன்றைய கூட்டத்தில் என்ன முடிவு எடுக்க போகிறார்களோ தெரியவில்லை.



தேர்தல் பரப்புரை என்பது மிக இலகுவான விடயம் அல்ல. கட்டமைப்பு ரீதியாக வலிமையற்ற கடிதத் தலைப்பு கட்சிகளோடு இணைந்து மக்களிடத்திலே கொள்கையையும் கோட்பாட்டையும் நோக்கு நிலையையும் கொண்டு போய் சேர்ப்பதற்குரிய அடைவு மட்டத்தை எப்படி உருவாக்குவது? கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாகவே ஊடகங்களில் 'தேசமாக திரள்வோம், திரள்வோம்!' என அறைகூவல் விடுத்ததை தவிர எதையும் திரட்டியதாக இல்லை. இந்த ஏழு கட்சிகளின் மொத்த உறுப்பினர்கள் ஏறக்குறைய 500 பேர் வருவார்களா? என்ற கேள்வி கூட உண்டு. அவர்களில் எத்தனை பேர் தமது வாழ்வாதாரத்தை கடந்து தேர்தல் பரப்புரையில் ஈடுபடப் போகிறார்கள்? சிவில் சமூகத்தின் வரையறை என்ன? அதன் அடிப்படை நோக்கு நிலை என்ன? அதன் செயற்பாட்டு யதார்த்தம் என்ன? என்பவை எல்லாம் இந்த ஏழு பிரமுகர்களுக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் அவர்கள் எந்த சிவில் சமூகத்திலும் இருந்தவர்களாகவோ இருப்பவர்களாகவோ தெரியவில்லை.



வி.எஸ்.சிவகரன்

அரசியல் கட்சி செய்ய வேண்டிய வேலைகளை சிவில் அமைப்புக்களால் ஒரு போதும் செய்து விட முடியாது. கட்சியின் ஒரு கடை நிலை தொண்டன் ஆற்றக்கூடிய மக்கள் பணி, செயலற்ற பொருளை வழி வரைபடம் தெரியாமல் வசதி வாய்ப்டே பாடு நான்கு சுவருக்குள் இருந்து பத்தி எழுதுவது போல் இலகுவானது அல்.

தமிழ்ப் பொது வேட்பாளர் என்கின்ற கோட்பாடு போற்றுதலுக்கு உரியது. ஆனால் அதனை நடைமுறைப்படுத்தக் கூடிய வழிகள் என்ன என்பதைத் தான் பலரும் கேள்விக்கு உட்படுத்துகிறார்கள்.

ஏனெனில் அரசியல் கட்சிகள்தான் அரசியல் கள நிலைவரத்துக்கு ஏற்றால் போல் செயல்பட முடியும். அதனை புரிந்து கொள்ளாமல், 40 வருடங்களுக்கு மேற்பட்ட அரசியல் கட்சிகளோடும், கால் நூற்றாண்டு கடந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை கொண்ட கட்சிகளோடும் முற்றிலும் அனுபவமற்றவர்கள் சம பங்கு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். திராணியற்ற கட்சிகளும் வல்லமையற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதனை ஏற்றுக் கொண்டு ஒப்பமிட்டிருக்கிறார்கள். இந்தப் பிரமுகர்களால் இப்பொழுது எதை நோக்கி நகர்த்தி இருக்க முடிந்துள்ளது? வேட்பாளர் தெரிவிலேயே இவர்கள் சறுக்கிவிட்டனர். இன்னும் 27 நாள்களில் எல்லாம் தெரிந்து விடும். பாதகமான கள நிலைவரத்தில் நகர்ந்து வெற்றி பெற்று விடலாம் என குருட்டு நம்பிக்கையில் புறப்பட்டவர்கள் தமிழ் மக்களை மற்றுமொரு முள்ளிவாய்க்கால் போல நடுவீதியில் கொண்டு வந்து நிறுத்தப் போகிறார்கள். இவர்கள் தங்களை புலிகள் என எண்ணுகிறார்கள் போலும் – தாங்கள் சொல்வதை எல்லோரும் ஏற்க வேண்டும் என்று. ஏனெனில் இவர்களின் கொள்கையை மக்கள் மத்தியில் விதைப்பதற்கு கோடிக்கணக்கில் பணம் தேவை. இவர்களை உசுப்பேத்தி விட்டவர்கள் இப்பொழுது நிதி கொடுப்பதற்குத் தயங்குகின்றார்கள் போலத் தெரிகிறது.

ஆகவே பரிதாபத்துக்குரிய நிலைமை இவர்களுக்கு அல்ல. தமிழ் இனத்துக்கு.

தங்கள் செயற்பாட்டைப் பற்றி தாங்களே ஊடகங்களில் பத்தி எழுதுவது எவ்வளவு அபத்தம்? ஏனெனில் அரசியல் கட்சிகளோடு சம பங்கு கேட்டவர்கள் இப்பொழுது அவர்களும் அரசியல்வாதிகளே. ஒரு அரசியல்வாதிகள் எப்படி பத்தியாளர்களாக ஊடகங்

தொடர்ச்சி▼



# தடுமாறும் பொது வேட்பாளரும் தடம் புரளும் தமிழரசுக் கட்சியும்

தொடர்ச்சி▲

களிலே எழுத முடியும்? அவர்களுக்கு இடம் அளிக்கின்ற ஊடகங்களும் குறைந்த பட்சம் நடுநிலை அற்றவர்கள் என்றே கருத வேண்டி உள்ளது. இவ்விதமான ஊடகங்களின் கருத்துக்களை எதிர்காலத்தில் நடுநிலையோடு மக்கள் எப்படி நோக்கி விட முடியும்? எத்தனை நாளுக்கு ஒளிந்துப்பிடித்து விளையாடுவது?

இந்தக் குறிப்பிட்ட காலத்துக்குள் எப்படி வடக்கு, கிழக்கு எங்கும் கிராமங்கள் தோறும் அடிமட்ட மக்கள் மத்தியில் பொது வேட்பாளர் கோஷத்தை கொண்டு செல்லப் போகிறார்களோ தெரியவில்லை. அது இலகுவான விடயம் அல்ல. வடக்கில் உள்ள மூன்று மாவட்டங்களின் நகரங்களில் மட்டுமே சில நூற்றுக் கணக்கானவர்களோடு கூட்டங்களை நடத்தியி ருக்கிறார்கள். அந்தக் கூட்டங்கள் கூட ஒரு பேரெழுச் சியை ஏற்படுத்தவில்லை. ஏனெனில் அரசியல் மேடை என்பது சூடான, சுவையான, இதமான, நகைப்பான வாதப்பிரதிவாதங்களால் தொண்டர்களை உணர்ச்சி ஊட்டி, எழுச்சி ஊட்டி, அணி திரட்ட கூடிய வார்த்தைப் பிரயோகங்களையும் நம்பிக்கை ஊட்டக்கூடிய கருத்துக்களையும் எழுச்சியோடு புகுத்தக்கூடிய களம். அவ்விதமான பேச்சுக்களை இரசிப்பதற்கு மக்கள் சிலர் இயல்பாகவே தேர்தல் பரப்புரைக் கூட்டங்களை நோக்கிக் கட்சிகளைக் கடந்து போவது வழமை.

ஆனால் இவர்களிடத்தில் அவ்வாறு சூடு, சுவையாகப் பேசுவதற்கு ஒருவர் கூட இல்லையே. எப்படி மக்களை தானாக அணி திரட்ட முடியும்?

முல்லைத்தீவில் நடந்த கூட்டத்தில் கலந்து கொண்ட ஒருவர் கூறினார்:– “வழமையான தேர்தல் பரப்புரைக் கூட்டம் என்று நானாகப் போனேன். ஆனால் அவர்கள் அங்கு ஏதோ நடைமுறை சாத்தியமற்ற சித்தாந்தங்கள் எல்லாம் பேசுகிறார்கள். நான் பாதியிலேயே எழும்பி வந்து விட்டேன்” –என்றார்.

தமிழ் மக்கள் மத்தியிலே நம்பிக்கையீனங்கள் அதிகரித்துவிட்டன. மாவீரர் தினம் ஒன்றைத் தவிர ஏனைய எந்த நிகழ்வுகளுக்கும் தன்னார்வத்தோடு கலந்து கொள்ளக்கூடிய மனோநிலையில் அவர்கள் இல்லை அதிலும், குறிப்பாக தமிழ்த்தேசியக்கட்சிகள் எனக் கூறப்படுபவர்கள் அரசாங்கத்தோடு இரட்டை நிலைப்பாட்டை பேணுவதால் மக்கள் முழுமையாக நம்பிக்கை இழந்தவர்களாகவே உள்ளனர் .ஆகவே இந்தத் தலைவர்களை நம்பி மக்கள் அணி திரளக்கூடிய கள நிலை என்பது சாத்தியமற்றது.

கவலை அடைந்த தமிழரசு கட்சியின் மூத்த உறுப்பினர் போல் தான் ஏனையவர்களும் இவர்களை கண்டு பரிதாபம் அடைவார்களே தவிர, வாக்களிக்க கூடிய மனோநிலைக்கு உட்படுவார்களா? அந்தக் களத்தை ஏற்படுத்த வேண்டியது இவர்களினுடைய செயல்பாட்டில் தான் உள்ளது .

கடந்த 2014 ஆம் ஆண்டு மாவை சேனாதிராஜாவின் தலைமைத்துவத்தோடு தடுமாறத் தொடங்கிய தமிழரசுக்கட்சி தற்போது தெருச்சண்டைக்கு வந்துவிட்டது. கடந்த ஞாயிற்றுக்கிழமை தமிழரசுக் கட்சியிலே தீர்மானம் மேற்கொண்டார்கள். கட்சி தீர்மானிக்காத வரை எந்த வேட்பாளரையும் ஆதரிக்கக் கூடாது என்று தீர்மானம். மேற்கொண்டு சில தினங்களிலேயே தமிழரசு கட்சிக்கு தலைவராக தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் பகிரங்கமாகவே தான் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவு என அறிவித்துள்ளார். கட்சி என்ன தீர்மானித்தாலும் கவலையில்லை என்கிறார்கள். அது மட்டுமன்றி அவர்தான் பொது வேட்பாளரின் சின்னத்தையும் தீர்மானித்தார் என வேட்பாளர் கூறுகிறார்.

அப்படியானால் தமிழரசுக்கட்சியின் தீர்மானம் எங்கே காற்றில் பறந்து விட்டதா? ஆதரிக்க மறுக்கும் சுமந்திரன் – சாணக்கியன் தரப்பு பகிரங்கமாகவே பொது வெளியில் கருத்து தெரிவிக்கின்ற போது, ஆதரவுக் கருத்தும் கிளிநொச்சியை மையமாகக் கொண்டு இயங்கும் தமிழரசு கட்சி உறுப்பினர்களால் சமூக ஊடகங்கள் வாயிலாகவும் நேரடியாகவும் பரப்புரை செய்யப்படுகின்றன. இப்பொழுது கட்சி என்ன செய்யப் போகிறது.?

தொடர்ச்சி▼





# தடுமாறும் பொது வேட்பாளரும் தடம் புரளும் தமிழரசுக் கட்சியும்

**தொடர்ச்சி▲**

தற்போதைய தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவும் பொது வேட்பாளருக்கு ஆதரவான நிலைப்பாட்டிலே இருக்கிறார். வெளிப்படையாக ஆதரிக்கக் கூடாது என தீர்மானம் எடுத்தவர்கள் அதைக் கண்டு கொள்ளாமல் ஆதரிப்பவர்கள் மீது ஒழுங்காற்று நடவடிக்கை எடுப்பார்களா? அல்லது வழமை போன்று தங்களுக்கு எதிரானவர்களுக்கு மட்டும் நடவடிக்கை எடுத்து வெளியேற்றுவார்களா? மைத்திரிபால சிறிசேனவை தமிழரசு கட்சி ஆதரிப்பதாக தீர்மானம் மேற்கொள்ளவில்லை. 26.12.2014 வெள்ளிக்கிழமை வவுனியாவில் கூடிய தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாக தீர்மானம் எடுப்போம் என தீர்மானிக் கப்பட்டது. அதற்குப் பின்னர் மைத்திரிபால சிறிசேனவுக்கு நிபந்தனையற்று ஆதரிப்பது பொருத்தமற்றது என ஊடக சந்திப்பு நடத்திக் கருத்துத் தெரிவித்த அனந்தி சசிதரன், சிவகரன் போன்றவர்களை கட்சியிலிருந்து விலக்கினார்கள். ஏனெனில் சுமந்திரனுக்கு நெருக் கடியை கொடுக்கக் கூடியவர்கள் என்பதனால் சுமந் திரனின் விடாப்பிடியான நகர்வுகளால் வெளி யேற்றப்பட்டனர்.

இந்த விசாரணை குழுவில் இருந்த – இன்றைய கிளர்ச்சியாளர்கள் எனப் போலி முகத்தை காட்டுபவர்களான ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் இருவரும் – அப்போது உண்மையைக் கூறவும், நீதியை நிலைநாட்டவும் தவறி, சுமந்திரன்ன் கைப் பாவையாகவே இருந்தார்கள்.

அது மாத்திரமன்றி இப்போது புதிய வியாக்கியானம் கூறும் சிறிதரன் அவர்களும் இதே மத்திய குழுவில் இருந்தார். இப்பொழுது தங்களை நோக்கி கேள்விகள் எழுப்பப்படுகின்ற போதுதான் மற்றவர்கள் செயல்பாடுகளும் அவர்களுக்கு நினைவில் வருகிறது.

துரியோதனன் சபையாக இருக்கக்கூடிய தமிழரசு கட்சியில் நீதி கிடைக்கும் என நம்புவது கடலில் உப்பை கரைப்பதற்கு ஒப்பானது. அங்கு இருக்கின்ற ஒரு சிலரின் தீர்மானமே கட்சியின் தீர்மானமாக மாற்றமடைகிறது. தீர்மானத்துக்கு மந்தைகள் போல ஏனையவர்கள் தலை சாய்த்து விடுவார்கள். வெளியில் வந்து வீரப் பேச்சுக்களை ஆவேசமாக முழங்குவார்கள். கட்சிக் கூட்டங்களிலே அமைதி காத்து விடுவார்கள். ஏனெனில் அவர்கள் வெளிப்படையாக உண்மையை பேசுவதற்கு தயங்குபவர்கள். இப்பொழுது கட்சியிக் இரண்டு குழுக்கள் வெளிப்படையாகவும் மூன்றாவது குழு கமுக்கமாகவும் இருப்பதனால் ஆளுக்கு ஆள் தத்துவம் பேசுகிறார்கள். பலருக்கும் தமிழரசுக் கட்சி துரோகமே செய்தது. அந்த வரலாற்றை இவர்கள் ஒருபோதும் மறந்து விடக்கூடாது. அதனால் தான் இவர்களை தற்போது அறம் நின்று கொல்கிறது. சந்தி சிரிக்கும் நிலைக்குள் தள்ளி உள்ளது. நல்லவர்கள், வல்லவர்கள், ஆளுமை உடையவர்கள், செயலாற் றலுள்ளவர்கள் எல்லோரையும் தங்களுக்கு எடுபிடி களாக இருக்கவில்லை என்பதனால் திட்டமிட்டு புறக் கணித்தனர். சிலரை வெளியேற்றினார்கள். அதனால் கட்சி அடைந்த பயன் என்ன? மேலும் மேலும் பல வீனமடைந்து, மக்கள் மத்தியிலும் நம்பிக்கை இழந்து போய்விட்டது. ஆனாலும் தமது தவறினை அவர்கள் இன்னமுமே உணரவில்லை.

இப்பொழுது களநிலைவரத்தை உணராமல் தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கும் சிறிதரனின் வாக்கு வங்கியும் எவ்வாறான நிலைப்பாட்டை எடுத்தியம்பப் போகிறது என்பதனை தேர்தல் முடிவுற்றதும் அவருக்கு அது புலப்படுத்தும். அவர் கடந்த மூன்று தேர்தல்களில் தக்க வைத்த வாக்குகளை கூட இந்த பொது வேட்பாளருக்கு அவரால் பெற்றுக் கொடுக்கக் கூடிய நிலை இருக்குமா என்பதனை தேர்தல் முடிவு அவருக்குத் திட்டவட்டமாக உணர்த்தும். அது அடுத்து வருகின்ற தன்னுடைய நாடாளுமன்றத் தேர்தலிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை அவர் உணர்பவராக இல்லை.

தமிழரசுக்கட்சி எதிர்காலத்தில் ஒருமித்த கருத்தோடு இயங்குவதற்குரிய எந்த சந்தர்ப்பமும் இருப்பதாக தெரியவில்லை. ஆகவே இரண்டு அணிகளும் ஒருபோதும் இணைவதற்கான வாய்ப்பும் இல்லை. இருவரில் ஒருவர் கட்சியை விட்டு வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். அதனை அடுத்து வருகின்ற நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் கட்டியம்கூறும்.

ஆனாலும் தமிழ்த்தேசியத்திற்கு இவர்களே சாவு மணி அடிக்கிறார்கள் என்பதுதான் கள யதார்த்தம்.



# ரணிலை என் வீழ்த்த வேண்டும்?

கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்குத்தான் என் பதை உணராமல் நாட்டு மக்களின் தலையில் மிளகாய் அரைக்கும் வேலைகளில் ரணில் விக்ரமசிங்கவும் அவரது (புதுக்) கூட்டாளிகளும் ஈடுபட்டு வருகிறார்கள். ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறுவதற்காக ரணில் எந்த எல்லைக்கும் செல்வதற்கு தயாராகிவிட்டார். ஏனெனில், அவருக்கு தன்னுடைய அரசியல் வாழ்க் கையில் இழப்பதற்கு ஏதுமில்லை. நாட்டிலேயே அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்று தொடர்ச்சியாக நாடாளுமன்றம் சென்ற ரணில், கடந்த பொதுத் தேர்த லில் மிக மோசமாக தோற்கடிக்கப்பட்டார். அதுவும் அவரது கொழும்பு வாழ் உறவினர்கள், மேட்டுக்குடி நண்பர்கள், தமிழ்– முஸ்லிம் வாக்காளர்கள் என்று தொடர்ச்சியாக அவருக்கு வாக்களித்து வந்தவர் களினாலேயே கைவிடப்பட்டு அரசியல் அனாதையானார். ரணில் இன்று அடைந்திருக்கும் ஜனாதிபதி பதவி, ராஜபக்ஷகள் அவருக்கு அளித்தது. 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷக்களினால் நேரடியாக தோற்கடிக்கப்பட்ட ரணில், 2022இல் அவர்களைக் கொண்டே அந்தப் பதவியைப் பிடித்தார். விதி வலியது.

ராஜபக்ஷக்களினால் திவாலாகிய நாட்டை வரிசை யுகத்தில் இருந்து மீட்டவர் தான் என்பதுதான் ரணில் தற்போது முன்வைக்கும் வாதம். ஏற்கனவே, சிறீமாவோ பண்டாரநாயக்க காலத்திலும் வரிசையுகம் ஏற்பட்டது. சுதேசிய பொருளாதார கொள்கைகளை அமுலாக்கும் நிலைப்பாட்டுக்கு வந்த, சிறீமா அரசாங்கம் வரிசை யுகத்தைத் தோற்றுவித்தது. அந்த வரிசை யுகத்தை மாற்றத் தனக்கு வாக்களிக்குமாறு கோரியும், கடும் இனவாதம் கக்கிக் கொண்டும் ஆட்சிக்கு வந்தவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன. மாமன்– மருமகன், பெரியப்பா – பெறாமகன் கட்சியின் மூத்தவர் அவர். இப்போது, மூத்தவரின் வழியின் ரணிலும் தன்னை வரிசை யுகத்தை மாற்றிய யுக புருஷராக முன்னிறுத்துகிறார்.

சுதந்திர இலங்கையின் பொருளாதார சீரழிவுக்கும் இன முரண்பாடுகளுக்கும் இந்த நாட்டை தொடர்ச்சியாக ஆண்டு வந்த ஐ.தே.கவும், சுதந்திரக் கட்சியும் காரண மாகும். இப்போது, இந்தக் கட்சிகளின் புதிய வடிவங்களே ஆட்சிக்காக முட்டி மோதுகின்றன. ஐக்கிய மக்கள் சக்தி, ஐ.தே.க.வின் குழந்தை. பொதுஜன பெரமுன சுதந்திரக் கட்சியின் குழந்தை.

சுதந்திரக் கட்சி கூட ஐ.தே.க. சிசேரியனில் பிரசவித் ததுதான்.



புருஜோத்தமன் தங்கமயில்

சுதந்திர இலங்கைக்கும் ரணிலுக் கும் கிட்டத்தட்ட ஒரே வயது. அவர், இதுவரை 6 தடவைகள் பிரதமர் பத வியை வகித்திருக்கிறார். பல தடவைகள் எதிர்க்கட்சித் தலைவர், நீண்ட காலம் அமைச்சரவை அந்தஸ் துள்ள அமைச்சர், சுமார் அரைநூ ற்றாண்டு கால நாடாளுமன்ற உறுப்பு ரிமை என்ற வரலாற்றைக் கொண்டி ருப்பவர். அவரது அரசியல் – அதிகார அனுபவம் இலங்கை அரசியலில் யாருக்கும் இல்லை. இதற்கு முன்னர் இருந்தவர்களிடத்திலும் இல்லை. இனியும் யாருக்கும் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை. இறுதியாக அவர் காலம் பூராவும் காத்திருந்த ஜனாதிபதி பதவியையும் அறகலய போராட்டத்தினால் ராஜபக்ஷ க்களின் ஒத்தாசையோடு அடைந்துவிட்டார். இரண்டரை ஆண்டுகாலம் என்றாலும் அவர் நிறைவேற்றதிகார ஜனாதிபதியாகிவிட்டார். அவரினால் நேரடியாக மக்களிடம் வாக்குப் பெற்று அடைய முடியாத பதவி அது. வாழ்வு பூராவும் அந்தப் பதவி கைக்கு எட்டாமல் போய்விடுமோ என்று வருந்தி சோர்ந்திருந்த போது, கையில் விழுந்தது. இப்போது, கையில் விழுந்த பதவியை இறுகிப் பிடிப்பதற்காக அவர் ஆடும் ஆட்டம் அதிகார துஷ்பிரயோக – ஜனநாயக விரோத – ஊழல் மோசடி வழியிலானது. நாட்டின் பொருளாதாரத்தைச் சீரழித்தவர்களில் ரணிலுக்கும் பெரும் பங்குண்டு. மத்திய வங்கி பிணை முறி விவகா ரத்தில், நல்லாட்சிக் காலத்தில் அவர் நடந்து கொண்ட விதம் பாரிய விசாரணைகளை எதிர்கொள்ள வேண் டியது. ஆனால், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பி னரான ரஞ்சன் ராமநாயக்க சொல்வது போல, “அரசியல்வாதிகள் எல்லோரும் நண்பர்கள். அவர்கள் ஒருவரையொருவர் காப்பாற்றிக் கொள்வார்கள்...” என்பதுதான் யதார்த்த நிலை.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வீழ்த்தப் பட்ட ராஜபக்ஷக்கள் 2019இல், மீண்டும் ஆட்சியைப் பிடிக்கும் போது மூன்று விடயங்களை முன்வைத்து ஆட்சிக்கு வந்தார்கள்.

முதலாவது – நல்லாட்சிக்காரர்கள் நாட்டைப் பிரித்து தமிழர்களிடம் கொடுக்கப்போகிறார்கள். இரண்டாவது – முஸ்லிம் பயங்கரவாதம் நாட்டில் தலை தூக்கிவிட்டது.

மூன்றாவது – மத்திய வங்கிக் கொள்ளையர்களை

தொடர்ச்சி▼



# ரணிலை ஏன் வீழ்த்த வேண்டும்?

தொடர்ச்சி▲


விரட்டுவோம் என்பது.

ஆனால், அறகலய உச்சம் பெற்ற போது, மத்திய வங்கிக் கொள்ளையின் நாயகன் என்று யாரைத் தேர்தல் காலங்களில் சித்திரித்தார்களோ, அந்த ரணிலையே ஆட்சியைப் பொறுப்பேற்க அழைத்தார்கள். இரண்டரை ஆண்டுகாலம் அவரின் ஆட்சியைத் தாங்கியும் பிடித்தார்கள். ராஜபக்ஷக்களினால் ஏற்பட்ட வரிசையுகத்தை மாற்றி, பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்ட தன்னால், நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல 'இயலும்' என்பதுதான் ரணிலின் தேர்தல் பரப்புரை வாசம்.

அறகலய உச்சத்தில் இருந்த போது, எதிர்க்கட்சி களிடத்தில் ஓர் இணக்கம் ஏற்பட்டது. ராஜபக்ஷக்கள் ஆட்சியை கையளித்தால், அதனை தேசிய அரசாங் கத்தினூடாக ஏற்று, விரைவில் தேர்தலை நடத்தி நிலையான ஆட்சியை அமைத்துக் கொள்வது சார்ந்து அந்த இணக்கப்பாடு. இந்த யோசனைகளை வழங்கிய வர்களில் ரணில் முதன்மையானவர். ஆனால், இந்த ஆலோசனைகளை வழங்கிய சில நாள்களுக்குள்ளேயே அவர், கோட்டாபய ராஜபக்ஷவின் அழைப்பை ஏற்றுக் கொண்டு பிரதமராகிவிட்டார். ராஜபக்ஷக்களை காப்பதற்காக களத்தில் இறங்கிவிட்டார். ராஜபக்ஷ க்களுடன் அப்போது ரணில் செய்து கொண்ட இரகசிய ஒப்பந்தங்கள், இணக்கப்பாடுகளினால்தான், அவர் ஜனாதிபதியானார். தன்னுடைய பதவிக்காலம் முழு வதும் ஆளுமையும் செலுத்தினார். ஆனால், மக்களிடம் தன்னையொரு மீட்பராக சித்திரிக்கத் தொடங்கினார். அறகலயவின் ஆணையைப் பொய்யாக்கி, ராஜபக்ஷ க்களுக்கான அரசியல் மீள் எழுச்சிக்கான தடத்தை உருவாக்கிக் கொடுத்தவர் ரணில். எதிர்க்கட்சிகள் இடையே காணப்பட்ட இணக்கத்தை தன்னுடைய பதவிப் பேராசைக்காக ஒரே நொடியில் தூக்கி யெறிந்துவிட்டு ஓடியவர். அப்போது அவர், அந்த இணக்கப்பாட்டின் படி இயங்கியிருந்தால், ஜனாதிபதி பதவியை அடைந்திருக்க வாய்ப்பில்லை. சிலவேளை சில காலம் பிரதமர் பதவியில் இருந்திருக்கலாம். ஆனால், நாட்டில் நிலையான ஆட்சி ஏற்பட்டிருக்கும். பலமான எதிர்க்கட்சியும் களத்தில் இயங்குவதற்கான சூழல் உருவாகியிருக்கும். ஜனநாயகத்தின் அடிவேர் களை அறுத்துக் கொண்டு அதிகாரத்தை அடைந்தவர் ரணில். இப்போது, உயர்நீதிமன்றமே அவரை ஜனநாயக விரோத சக்தியாக அடையாளம் காட்டுகின்றது. உள்ளூராட்சித் தேர்தலை நடத்தாது, மக்களின் ஜனநாயக உரிமையை பறித்தவர் என்று தன்னுடைய தீர்ப்பில் சுட்டிக்காட்டுகின்றது. இப்படிப்பட்ட ஜனநாயக விரோதியான, இரகசிய ஒப்பந்தங்களின் மூலம் ராஜபக்ஷக்களைக் காப்பாற்றியவரை, நாட்டின் மீட்பராக சித்திரிக்கும் அரசியல் அபத்தமானது. அது, ஊழல், மோசடி, சலுகை அரசியலினால் வருவது. அதனை, கொழும்புவாழ் மேட்டுக்குடி இணக்க தமிழ் – முஸ்லிம் பிரமுகர்களும் முன்னெடுக்கிறார்கள். அதற்காக அவர்கள் என்றைக்கும் இல்லாதவாறு களமாடுகிறார்கள்.

தமிழரசுக் கட்சியின் இறுதி மத்திய குழுக் கூட்டத்தில், தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கும் கட்சியினரும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் ரணிலிடம், மதுபானசாலைக்கான அனுமதிப்பத்திரங்களை (பார் லைசன்ஸ்) வாங்கியிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. இந்தக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து பேசியவர்கள் நாடாளுமன்ற உறுப்பி னர்கள். எந்த ஆட்சிக் காலத்திலும் இல்லாத அளவுக்கு நாட்டில் அதிகமாக மதுபானசாலைகள் ரணிலின் கடந்த இரண்டரை ஆண்டுகால ஆட்சியில் முளைத் திருக்கின்றன. இவை எல்லாமும், தன்னுடைய ஆட்சி யைக் காப்பாற்றவும், ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு திரட்டுவதற்காகவும் வழங்கப்பட்டன என சஜித் அணி குற்றஞ்சாட்டுகின்றது. ஆதாரங்களையும் முன் வைக்கின்றது. நாட்டின் பொருளாதாரத்தை மீட்ட நாய கன், மதுபானசாலைகளின் வழியாக பொருளாதாரத்தின் உச்ச பயனை நாட்டு மக்களுக்கு வழங்குகிறாரா என்பது முக்கியமான கேள்வி. தமிழரசுக் கட்சியின் தலைவர்கள், கடந்த காலத்தில் ரணிலை ஜனநாயக விரோத சக்தியாக விமர்சித்திருக்கின்றனர். அப்படி விமர்சித்தவர்களில் சுமந்திரனும் சாணக்கியனும் பிரதானமானவர்கள். இந்த நிலையில், ரணிலை ஆதரிக்கும் முடிவை நோக்கி அவர்களினால் செல்ல முடியாது. அப்படிச் சென்றால், மத்திய குழுக் கூட்டத்தில் மதுபானசாலைக்கான அனுமதிப்பத்திரங்கள் தொடர்பில் பேசப்பட்டதற்கான பதில்களை அவர்கள் வழங்க வேண்டியிருக்கும். மதுபானசாலை அனுமதிப் பத்திரம் மற்றும் ரணிலுக்கு வாக்களிப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் லஞ்சம் பெற்றமை தொடர்பில் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவுக்குள் பேசப்பட்டமை தொடர்பில், மத்திய குழு உறுப்பினர் பகிரங்கமாக சமூக ஊடகங்களில் எழுதியும் இருக்கிறார்கள். அப்படியான நிலையில்,

தொடர்ச்சி▼



# ரணிலை ஏன் வீழ்த்த வேண்டும்?

**தொடர்ச்சி▲**

ரணிலை நோக்கிய பாய்ச்சலை தமிழரசுக் கட்சியினால் நிகழ்த்த முடியாது. அதற்கு எந்த வாய்ப்பும் இல்லை.

ரணிலோடு தற்போது இணைந்திருப்பவர்கள் எல்லோரும் கடந்த காலத்தில் ராஜபக்ஷக்களின் வெற்றிகளில் பங்களித்தவர்கள். இனவாதத்தையும் மதவாதத்தையும் அவர்களின் இரட்டை இலக்காகக் கொண்டவர்கள். ரணிலை விட்டால் அவர்களுக்கு இப்போது போக்கிடம் இல்லை. ராஜபக்ஷக்கள் அடையாளத்தோடு எதிர்வரும் தேர்தல்களை எதிர்கொண்டால், தங்களது நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளுக்கே பிரச்சினை வந்துவிடும் என்ற நிலையில்தான், அவர்கள் ரணில் பின்னால் திரண்டிருக்கிறார்கள். தமிழ் – முஸ்லிம் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர், சலுகைகள் மற்றும் 'பார்' போற்றும் விடயங்களுக்காக இணைந்திருக்கிறார்கள். ஏனெனில், அவர்களினால் அடுத்த தேர்தலில் வெற்றிபெறும் வாய்ப்புக்கள் இல்லை என்கிற போது, இப்போதே வாரிச்சுருட்டிக் கொள்ள நினைக்கிறார்கள். அதாவது, காற்றுள்ள போதே தூற்றும் உத்தி.

இன்னொரு பக்கம், தமிழ் – சிங்கள – முஸ்லிம் மேட்டுக் குடிகளும் முகவர்களும் ரணிலை இணக்கமாக பார்க்கின்றனர். இந்தத் தரப்பினர் எப்போதுமே தங்களின் தனிப்பட்ட நலன் சார்ந்து மாத்திரமே சிந்தித்து வந்திருக்கின்றனர். இவர்களுக்கு நாடு குறித்தோ, இனமுரண்பாடுகள் குறித்தோ எந்தவித கவலையும் இல்லை. தங்களின் கல்வி, பொருளாதார நிலை, சொகுசு வாழ்கை குறித்தே சிந்தனை. அதில், தலையீடுகளை செய்யாது யார் ஆட்சி செய்தாலும் அவர்களின் செல்லப்பிள்ளைகளாக இருப்பார்கள்.



அவர்களுக்காக உழைப்பார்கள். கருத்துருவாக்கத்தைச் செய்து சாதாரண மக்களிடம் திணிப்பார்கள். அப்படியான கருத்துக் கணிப்பொன்று, அண்மையில் கொழும்பில் இயங்கும் அரசசார்பற்ற நிறுவனமொன்றின் பெயரினால் வெளியிடப்பட்டது.

ரணிலை இந்த ஜனாதிபதித் தேர்தலில் யாரெல்லாம் ஆதரிக்கிறார்கள் என்பதை பார்த்தாலே போதும், அவர் ஏன் வீழ்த்தப்பட வேண்டியவர் என்பதை அறிவதற்காக. ராஜபக்ஷக்களின் வால்களும், சலுகை பெற்றோரும், உடல் உழைப்பை வழங்காது ஏய்த்து வாழும் தரப்பும் இணைந்ததுதான் ரணில் அணி. அங்கு ஜனநாயக உரையாடல்களுக்கோ, பொருளாதார முன்னேற்றத்திற்கோ இடமில்லை. வரிசை யுகத்தை இல்லாதொழித்துவிட்டதாக தேர்தல் பரப்புரையை முன்வைத்தாலும், அதில் எவ்வளவு தூரம் உண்மையிருக்கின்றது என்பது முக்கிய கேள்வி. கடந்த காலத்தில் ராஜபக்ஷக்களோடு இருந்து நாட்டைச் சூறையாடியவர்கள் இப்போது ரணிலோடு சேர்ந்து நின்று சூறையாட முயல்கிறார்கள். அவர்கள்தான், ரணிலை நம்பிக்கையின் முகமாக காட்டுகிறார்கள். ரணிலுக்கு இழப்பதற்கு ஏதுமில்லை என்ற நிலையில், அவர் அத்தனை வழிகளிலும் வெற்றிக்காக போராடுகிறார். கொண்டும் – கொடுத்தும் உழைக்கிறார். ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கு துணை போகிறார்.

தமிழ் மக்களைப் பொறுத்தளவில் இந்தத் தேர்தலில் ரணிலை ஆதரிப்பதற்கான எந்தத் தேவையும் இல்லை. ராஜபக்ஷக்களின் இடத்தில் இப்போது ரணில் நிற்கிறார். ராஜபக்ஷக்களோடு இருந்தவர்கள் எல்லோரும் ரணிலோடு நிற்கிறார்கள். கடந்த காலங்களில் ராஜபக்ஷக்களின் விசுவாசிகளாக வடக்குக் கிழக்கில் நின்ற டக்ளஸும், பிள்ளையானும், வியாழேந்திரனும், அங்கஜனும் இப்போது ரணிலோடு நிற்கிறார்கள். அவர்கள் வழியே சிறந்தது என்றால், ரணிலோடு இணங்கிப் போவதில் பிழையில்லை. ஆனால், இவர்களின் நிலைப்பாடுகளுக்கு எதிராகத்தான் கடந்த காலங்களில் ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் எதிர்கொண்டிருக்கிறார்கள். அந்த நிலைப்பாட்டில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான எந்தத் தேவையும் தமிழ் மக்களுக்கு இல்லை. ஆக, ரணிலின் பக்கத்தில் தமிழ் மக்கள் 'சாய' மாட்டார்கள். தமிழ் அரசியல்வாதிகள் சிலருக்கு ரணில் இப்போது 'பார்' போற்றும் தலைவர். ஆனால், தமிழ் மக்களுக்கு இல்லை. காலம் அதனை உணர்த்தும்.




# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரின் பிரசாரம் பொலிஸார் தலையீடு காரணமாக இடைநிறுத்தம்!

## திருக்கோவிலில் நேற்றுச் சம்பவம்

**(பாறுக் ஷிஹான்)**

பொலிஸார் தலையீடு காரணமாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பிரசாரம் இடைநடுவில் கைவிடப்பட்டு தேர்தல் திணைக்களத்தில் முறைப்பாடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நேற்ற முற்பகல் வேளை அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பொலிஸ் பிரிவிற்குட்ட பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பிலான தெளிவூட்டும் துண்டு பிரசுரம் வழங்கும் செயற்பாட்டில் தமிழ் தேசிய மக்கள் முன்னணிக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் புஸ்பராஜ் துஷானந்தன் தலைமையில் கட்சியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன், தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ் உள்ளிட்ட பலரும் ஈடுபட்டிருந்தனர்.

இதன் போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்குமாறு கோரி துண்டுப் பிரசுரம் வழங்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளதை ஏற்க முடியாது எனத் தெரிவித்து தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தரப்பினருக்கு எதிராக பொலிஸார் இடையூறு விளைவித்துள்ளனர்.

அத்துடன் சம்பவ இடத்திற்கு வந்த திருக்கோவில் பொறுப்பதிகாரி தேர்தலை புறக்கணிக்க கோருவது சட்டவிரோதம் எனவும், நல்லிணக்கத்தோடு உள்ள திருக்கோவில் பகுதியில் இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டாம் எனவும் அறிவுறுத்தினார்.

இதன்போது இரு தரப்புக்கும் இடையில் வாக்குவாதம் ஒன்று இடம்பெற்றுள்ளது.இதற்கு பதிலளித்த, கஜேந்திரன் எம். பி தேர்தல் விஞ்ஞாபனங்களில் தமிழ் மக்களுக்கு முறையான தீர்வு கிடைக்க வேண்டும் என்பதையே தாம் வலியுறுத்தியதாகவும் கூறியுள்ளார்.

குறித்த பிரசாரத்தை இப்பகுதி மக்கள் விரும்பவில்லை என பொறுப்பதிகாரி மேலும் குறிப்பிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.















# கூட்டுறவு அமைப்புப் பிரதிநிதிகளை சந்தித்தார் தமிழ்ப் பொதுவேட்பாளர்

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளராகக் களமிறங்கியுள்ள பா. அரியநேத்திரன் பல்வேறு பொது அமைப்புகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து வருகிறார். இதன் ஒரு கட்டமாக நேற்று சனிக்கிழமை யாழ் மாவட்டக் கூட்டுறவு அமைப்புகளின் உயர்மட்டப் பிரதி நிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இச் சந்திப்பு நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் சமூக அரசியற் செயற்பாட்டாளர் க. அருந்தவபாலன், தமிழ் மக்கள் பொதுச் சபையைச் சார்ந்த நிலாந்தன் ஆகியோரும் கலந்துகொண்டு தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டியதன் அவசியம் குறித்து உரையாற்றியிருந்தார்கள்.



# காலஞ்சென்ற இலியாஸுக்கு பதிலாக வேறொரு வேட்பாளருக்குச் சந்தர்ப்பம்

ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடவிருந்த நிலையில் மரணித்த வைத்தியர் ஹைதுரூஸ் மொஹம்மட் இலியாஸுக்குப் பதிலாக வேறொரு வேட்பாளரை முன்நிறுத்த சந்தர்ப்பம் உள்ளது என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஹைதுரூஸ் மொஹம்மட் இலியாஸின் மரணச் சான்றிதழைச் சமர்ப்பிப்பதன் மூலம் இலியாஸ் சார்பில் வேட்புமனுவில் கையொப்பமிட்டவருக்கு வேறொரு வேட்பாளரை பரிந்துரைக்க முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.



இதற்கு 3 நாள்கள் கால அவகாசம் வழங்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் வாக்குச்சீட்டில் மொஹம்மட் இலியாஸின் வாக்காளர் சின்னமும் பெயரும் அச்சிடப்பட்டுள்ளதால் அவற்றில் மாற்றங்கள் ஏதும் இடம்பெறமாட்டாது என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் இம்முறை சுயாதீன வேட்பாளராகப் போட்டியிட வேட்புமனுத் தாக்கல் செய்திருந்த புத்தளத்தைச் சேர்ந்த வைத்தியர் ஹைதுரூஸ் மொஹம்மட் இலியாஸ் கடந்த வியாழக்கிழமை காலமானார்.

மாரடைப்பால் புத்தளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர் தனது 79 ஆவது வயதில் இயற்கை எய்தினார்.



# புத்தளத்தில் பீடி இலை பொதிகள் மீட்பு!

புத்தளம், கற்பிட்டி – கப்பலடி கடற்கரைப் பகுதியில் நேற்று சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட பீடி இலை பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று இலங்கை கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கடல் வழியாக இடம்பெறும் சட்ட விரோத நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காகக் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே இந்தப் பீடி இலைபொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது, 776 கிலோகிராம் நிறையுடைய பீடி இலைகள் அடங்கிய 24 பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட பீடி இலை பொதிகள் மேலதிக விசாரணைகளுக்காகக் கடற்படையினரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.





# உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரிகள் என்ற போர்வையில் பணம் வசூலிக்கும் மோசடிக் குழுக்கள்!

உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரிகள் எனும் போர்வையில் சில மோசடிக் குழுக்கள் வர்த்தக நிலையங்களுக்குச் சென்று வரிப் பணத்தை வசூலிப்பதாகத் தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைக்கின்றன என்று உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு, பாணந்துறை, நீர்கொழும்பு, வென்னப்புவ, மினுவாங்கொடை ஆகிய பகுதிகளில் இந்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று திணைக்களத்தின் மத்திய குழு குறிப்பிட்டுள்ளது.

உள்நாட்டு இறைவரி திணைக்களத்தால் நிர்வகிக்கப்படும் வரி வகைகள் தொடர்பான வரிப்பணத்தை அரச வங்கிகளில் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் பெயரில் பராமரிக்கப்படும் கணக்குகளில் மாத்திரம் வைப்பிலிடுமாறு உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரிகள் வரி செலுத்துவோரை அறிவுறுத்துகின்றனர்.

மாறாக பணம் அல்லது காசோலைகள் எதுவும் வசூலிக்கப்பட மாட்டாது என்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.




இதனைக் கவனத்தில்கொண்டு செயற்படுமாறும் குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்துமாறும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மக்களை அறிவுறுத்தியுள்ளது.

அத்தகைய மோசடிக்காரர்களிடம் சிக்கியிருந்தால் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்குமாறும் உள்நாட்டு இறைவரி திணைக்களம் மக்களை கோரியுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 25.08.2024




உங்கள் லட்சியத்தை நிறைவேற்றிக் கொள்ள இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கள். தற்போதைய சூழ்நிலையில் உங்கள் தன்னம்பிக்கை அதிகரித்து காணப்படும். கடினமான பணிகளைக் கூட எளிதாக செய்து விடுவீர்கள்.

உங்கள் பணியில் நீங்கள் வெற்றி பெற வாய்ப்புள்ளது. உங்கள் பணிகளை நீங்கள் விழிப்புணர்வுடன் ஒழுங்கு முறையுடன் மேற்கொள்வீர்கள். பதவி உயர்வுக்கும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் நல்லுறவை ஏற்படுத்த முயல வேண்டும். இதனால் இருவரிடையே நல்லுறவு வளரும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். புதிய முதலீடுகளுக்கு இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.அது உங்களுக்கு திருப்திகரமாக இருக்கும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்களிடம் தன்னம்பிக்கை நிறைந்து காணப்படும். இன்று நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் செயல் திறன் காரணமாக மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர் கள். உங்கள் நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும்.

உங்களின் இனிமையான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். இதனால் இருவரும் நல்லுறவை பராமரிக்கலாம்.

பண வரவு திருப்திகரமாக இருக்கும். நீங்கள் கணிசமான தொகையை சம்பாதிப்பீர்கள்.

தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் நம்பிக்கை நல்ல ஆரோக்கியத்தை அனுபவிக்க உதவும்.




இன்று மகிழ்சிகரமான நாளாக அமையாது. விருப்பமானவற்றை அடைய நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். தாமதங்களை சந்திப்பீர் கள். நல்ல விளைவுகளைப் பெறுவ தற்கு பயனுள்ள முறைகளை பின்பற் றுங்கள்.

பணியிடத்தில் கடினமான சூழல் காணப்படும். உங்கள் இலக்கை அடைவதில் தாமதங்கள் காணப்படும். உங்கள் பணிகளைக் கையாள்வதில் பொறுமை தேவை.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை கட்டுப்படுத்த வேண்டும். சகஜமாக நடந்து கொள்ள வேண்டும்.நட்பு முறையோடு நடந்தால் நல்ல புரிந்து ணர்வு ஏற்படும்.




இன்று சிறப்பான நாளாக இருக்கும். உங்கள் திறமையையும் புத்திசாலித்தனத் தையும் பயன்படுத்தி வெற்றி பெறலாம். இன்று மகிழ்ச்சி நிறைந்து காணப்படும்.

பணி நிமித்தமான பயணம் காணப படும்.பணிகளை குறித்த நேரத்துக்கு முன்பே முடிப்பீர்கள்.உங்கள் இனிமையான வார்த் தைகளால் உங்கள் துணையை இன்புறச் செய்வீர்கள். வெளியிடங்களுக்கு சென்று வருவதன் மூலம் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

தொலை தூரத்திலிருந்து உங்களுக்கு பணம் வர வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். உங்கள் சேமிப்பை இன்று அதிகரிக்க முடியும்.

உங்களின் அனுசரணையான மன நிலை காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.




இன்றைய நாள் சுறுசுறுப்புடன் இருக் காது. பதற்றமும் தனிமையும் காணப் படும். தான தர்மம் மற்றும் தொண்டுகளில் ஈடுபடுவதன் மூலம் ஆறுதல் பெறலாம். வெளிப்படையாக இருக்க வேண்டும். எதையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

பணியில் ஆர்வம் குறைந்து காணப்படும். பணியிடச் சூழல் சலிப்பைத் தருவதாக இருக்கும். ஆர்வம் அதிகரிக்க புதிய யுத்திகளைக் கையாள வேண்டும்.

ஆர்வமின்மையும் பாதுகாப்பின்மை உணர்வும் காணப்படும். உங்கள் துணையிடம் அத்தகைய உணர்வு களை தவிர்த்தல் வேண்டும்.நிதிநிலைமை இன்று சாதகமான நிலையில் காணப்படாது. பண நஷ்டம் காரணமாக நீங்கள் ஏமாற்றத்தை உணர்வீர்கள்.




இன்று மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். புதிய தொடர்புகள் ஏற்படுத் திக்கொள்ள இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்தலாம். விருந்து விழாக்களில் கலந்து கொள்வது மகிழ்ச்சியை அளிக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமை மதிக்கப்படும். நீங்கள் செய்யும் பணிகளை விரும்பி மேற்கொள்வீர்கள்.

இன்று நீங்கள் உங்கள் துணையுடன் வெளிப்படையாகப் பேசுவீர்கள். இதனால் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ள முடியும்.இன்று நிதிநிலையை சிறப்பாக பராமரிக்கும் வாய்ப்பு காணப்படுகின்றது. பங்கு வர்த்தகத்தில் ஈடுபட முயற்சிக்கலாம். அது உங்களுக்கு லாபகரமானதாக இருக்கும்.




இன்று தவறுகள் செய்ய வாய்ப்புள் ளதால் பொறுமையோடு இருக்க வேண்டும். இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும். ஆன்மீகத்தில் ஈடுபாவதன் மூலம் நீங்கள் ஆறுதல் பெறலாம்.

இன்று அதிக பணிகள் காணப்படும். பணிச்சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்காது. சகபணியாளர்க ளுடன் தொடர்பு கொள்வதில் சிக்கல்கள் காணப்படும்.

நல்லுறவுக்கு அனுசரித்துப் போதல் வேண்டும். உங்கள் துணையிடம் அத்தகைய அணுகுமுறை மேற்கொள்வது உறவில் அன்பை வளர்க்கும்.

ஆன்மீக நோக்க பயணங்களுக்காக பணம் செலவு செய்வீர்கள். அதில் ஈடுபடுவதன் மூலம் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும்.கண் எரிச்சல் காணப்படலாம். பல் வலிக்கும் வாய்ப்பு உள்ளது.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்கும். இன்று அபாரமான வளர்ச்சி காணப்படும். உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்.முக்கியமான முடிவுகள் எடுக்க இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இன்று பணிகள் சுமூகமாக நடக்கும். உங்கள் பணிகளை திறம்படச் செய்வீர்கள்.

இன்று உங்கள் அன்பை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவதற்கு உகந்த நாள். இன்று புதிய உறவை ஏற்படுத்திக்கொள்ள உகந்த நாள்.

சலுகைகள் மற்றும் ஊக்கத் தொகையாக இன்று பண வரவு காணப்படும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

இன்று உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 25.08.2024



தனுசு

இன்றைய நாள் அனுகூலமாக இருக்காது. பதற்றம் நிறைந்து காணப்படும். நல்ல பலன்களைக் காண ஆன்மீகத்தில் ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்.

பணி நிமித்தமான பயணங்கள் காணப்படும். உங்கள் செயல்திறனுக்கு மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் கடுமையாக நடந்து கொள்வதால் உறவில் மகிழ்ச்சி குறையும். உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க நகைச்சுவை உணர்வோடு பழக வேண்டும்.

இன்று சேமிப்பதற்கான வாய்ப்பு குறைந்து காணப்படும். பயணத்திற்கென பணம் செலவு செய்வீர்கள்.

இன்று பதற்றம் நிறைந்து காணப்படும். ஆரோக்கியமாய் இருக்க உங்களை அமைதியாய் வைத்துக் கொள்ளுங்கள்.



கும்பம்

இன்று விருப்பமான பலன்கள் கிடைக்காது. எதிர்பார்ப்புகளில் எம்மற்றங்களும் குழப்பங்களும் காணப்படும். இந்தச் சூழ்நிலையை தவிர்க்க பிரார்த்தனை மேற்கொள்ள வேண்டும். குழந்தைகளின் வளர்ச்சி நீங்கள் எதிர்ப்பார்க்கும் அளவுக்குக் காணப்படாது.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். நீங்கள் ஆற்றலுடன் பணியாற்ற திட்டமிடல் அவசியம்.

நீங்கள் விஷயங்களை லேசாக எடுத்துக்கொள்ள வேண்டும். உங்கள் துணையுடன் நகைச்சுவை உணர்வோடு பழக வேண்டும். இதனால் இருவரிடையே மகிழ்ச்சியை பராமரிக்க இயலும். இன்று பண வரவு குறைந்து காணப்படும் செலவுகள் அதிகமாக காணப்படும் காரணத்தால் பணத்தை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.



மகரம்


இன்று தேவையற்ற மன வருத்தங்கள் காணப்படும். இத்தகைய உணர்வை தவிர்த்தல் நல்லது. பிரார்த்தனை மற்றும் தியானங்கள் மூலம் ஆறுதல் பெறலாம்.

உங்கள் பணிகளில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. பணிகளில் தவறுகள் நேராமல் இருக்க கவனமுடன் பணியாற்ற வேண்டும்.

உங்கள் குழப்பமான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். மனதை தூய்மையாக வைத்திருப்பதன் மூலம் மகிழ்ச்சியை பராமரிக்கலாம்.

இன்று நிதிவளர்ச்சிக்கு சாதகமான நாளாக அமையாது. இன்று பண இழப்பு காணப்படும்இது உங்களுக்கு . ஏமாற்றத்தை அளிக்கும்.

இன்று சிறப்பான ஆரோக்கியத்தை பராமரிக்க இயலாது. கால் வலி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.



மீனம்

உங்கள் செயல்களில் சில தாமதங்கள் காணப்படும். உங்கள் அணுகுமுறையில் பொறுமை தேவை. கடவுள் வழிபாடு மற்றும் பிரார்த்தனையில் ஈடுபடுவதன் மூலம் நீங்கள் ஆறுதல் பெறலாம்.

உங்கள் பணிகளைக் கையாள்வது கடினமாக உணர்வீர்கள். பணியிடத்தில் உங்கள் சக பணியாளர்களுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும்.

உறவில் மகிழ்ச்சி நிலவ பொறுமை அவசியம். உணர்ச்சி வசப்படுவதன் மூலம் உறவு பாதிக்கும். எனவே அதனை தவிர்த்தல் நல்லது.

இன்று அதிக செலவுகள் செய்ய நேரும். சேமிக்கும் வாய்ப்பும் குறைவு.ஒவ்வாமை பாதிப்புகள் காணப்படும். அது உங்களுக்கு கவலையை அளிக்கும். தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் பெறலாம்.







# விமர்சனம் செய்யுங்கள் மனதை நோகடிக்காதீர்கள்



## ரஜினிகாந்த் தெரிவிப்பு

“விமர்சனங்கள் தேவை. அவை மழை போல இருக்க வேண்டும். புயல் போல இருக்கக் கூடாது. மற்றவர்கள் மனதை நோகடிக்கக் கூடாது. கருணாநிதி குறித்து படம் எடுக்க வேண்டும் என நான் கேட்டுக் கொள்கிறேன்.”

– இவ்வாறு நடிகர் ரஜினிகாந்த் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் எ.வ.வேலு எழுதிய ’கலைஞர் எனும் தாய்’ என்ற புத்தகத்தின் வெளியீட்டு விழா சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு பேசிய நடிகர் ரஜினி,

“இப்போதுதான் அரசியலில் நுழைந்து கடினமான உழைத்து, பேச்சில் தனக்கென ஒரு பாணியை உருவாக்கி கொண்டு, மக்கள் மத்தியில், தொண்டர்கள் மத்தியில் அருமையான, பெயர், புகழ் பெற்று, அரசியலில் தனக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது என நிரூபித்துக் கொண்டிருக்கிறார் உதயநிதி ஸ்டாலின்.

ஏவி விட்டால்தான் எல்லோரும் வேலை செய்கிறார்கள். ஆனால் ஏவி விடாமலே வேலை செய்பவர் எ.வ.வேலு. இதனை நான் சொல்லவில்லை. கருணாநிதி சொன்னார். கருணாநிதியின் நூற்றாண்டு விழா தமிழகத்தில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. உலகத்தில் யாருக்கும் இப்படி கொண்டாட மாட்டார்கள். மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. பல வேலைகளை கடந்து முதல்வர் தலைமை தாங்கி நடத்தி இருக்கிறார்.

மு.க.ஸ்டாலின் முதல்வர் ஆன பிறகு, அவர் சந்தித்த எல்லா தேர்தல்களிலும் வெற்றி பெற்றுள்ளார். இது அவரது ஆளுமையை வெளிப்படுத்தும் விஷயம். முதல்வர் பதவியை கட்டிக் காக்க பக்கத்து மாநிலங்களில் எத்தனை கஷ்டப்படுகிறார்கள் என்பது நமக்கு தெரியும். ஆனால், அதனை சாதாரணமாக கையாள்கிறார் ஸ்டாலின். பள்ளியில் புதிய மாணவர்களை சமாளிப்பது எளிது. ஆனால், பழைய மாணவர்களை சமாளிப்பது கஷ்டம். இங்கே ஏகப்பட்ட பழையவர்கள் இருக்கிறார்கள். இவர்களையெல்லாம் சமாளிப்பது சாதாரண விஷயமல்ல. துரைமுருகன் என்று ஒருவர் இருக்கிறார். கருணாநிதி கண்ணிலேயே விரல் விட்டு ஆட்டியவர் அவர்.

கருணாநிதியின் அரசியல் வாழ்க்கை எல்லோருக்கும் தெரியும். அண்மையில் மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங்கே, கருணாநிதி குறித்து அரைமணி நேரம் பேசினார். அது அவர் மட்டும் பேசியிருக்க மாட்டார். மேலிடத்திலிருந்து உத்தரவு வந்திருக்கும். எல்லாராலும் பாராட்டப்பட்ட அபூர்வமான மனிதர் அவர். ஒரு சிலர் தான் சமூகத்துக்கு, இனத்துக்காக போராடி பாடுபடுவர்கள். அதில் கருணாநிதி முக்கியமானவர். அவர் சந்தித்த சோதனைகள், விமர்சனங்களை வேறு யாராவது எதிர்கொண்டிருந்தால் காணாமல் போயிருப்பார்கள்.

விமர்சனங்கள் தேவை. அவை மழை போல இருக்க வேண்டும். புயல் போல இருக்கக் கூடாது. புயல் போல இருந்தால் மரங்களே சாய்ந்துவிடும். ஆனால் கருணாநிதி ஆலமரம். வேர் மிகவும் வலுவானது. உடன்பிறப்புகள் என்ற அவரது வேர்கள் மிகவும் வலிமையானவை. இல்லாவிட்டால், 12 வருடம் ஆட்சியில் இல்லாவிட்டால் கூட கட்சியை காப்பாற்ற முடியுமா? 5 வருடம் இல்லாவிட்டாலே திண்டாடுகிறார்கள். கருணாநிதி இறந்த பிறகு அவரது புகழ் வளர்ந்து கொண்டேயிருக்கிறது. அவர் குறித்து படம் எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். விமர்சனம் செய்யுங்கள். ஆனால், யார் மனதையும் நோகடிக்காதீர்கள்.”– என்றார்.

# வி.சி.க. தலைவர் திருமாவளவனுக்கு திடீரென பாதுகாப்பு அதிகரிப்பு

விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவனுக்கு திடீரென பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

பகுஜன் சமாஜ் கட்சியின் முன்னாள் மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங் கடந்த ஜூலை 5 ஆம் திகதி அவரது வீட்டின் அருகே வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார்.

இதையடுத்து, தமிழகத்தில் பட்டியலினத் தலைவர்களுக்கு பாதுகாப்பு இல்லை என்ற குற்றச்சாட்டு எழுந்தது. ஆம்ஸ்ட்ராங் மரணம் தொடர்பாக விசாரணை நடத்த தமிழகம் வந்த மத்திய இணையமைச்சர் ராம்தாஸ் அத்வாலே, பட்டியலினத் தலைவர்களுக்கு பாதுகாப்பை அதிகரிக்க வேண்டும் என வலியுறுத்தினார்.



தமிழக மக்கள் முன்னேற்றக் கழகத் தலைவர் ஜான் பாண்டியன் தனக்கும், வி.சி.க. தலைவர் திருமாவளவன், புதிய தமிழகம் கட்சித் தலைவர் கிருஷ்ணசாமி, நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் ஆகியோரின் உயிருக்கு ஆபத்து இருப்பதாகத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவனுக்கான பாதுகாப்பு அதிகாரிக்கப்பட்டுள்ளது. அவருடன் எப்போதும் தனி பாதுகாவலர் (பிஎஸ்ஓ) ஒருவர் பணியில் இருக்கும் நிலையில், தற்போது மேலும் ஒரு தனி பாதுகாவலர் மற்றும் காவலர் ஆகியோர் பாதுகாப்புக்காக பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக விசிக நிர்வாகிகள் கூறும்போது, ”கட்சி சார்பில் கோரிக்கை விடுக்கப்படாத நிலையிலும் அரசு சார்பில் கூடுதல் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. தற்போது நியமிக்கப்பட்டுள்ள இருவரும் சென்னையில் திருமாவளவன் இருக்கும்போது பணியில் இருப்பர் என தெரிவிக்கப்பட்டுள்ளது” – என்றனர்.

# பிரான்சின் அடுத்த பிரதமர் தெரிவு: தீவிரம் காட்டுகின்றார் மெக்ரோன்



பிரான்சின் அடுத்த பிரதமரை தேர்வு செய்வதற்காக, பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவல் மெக்ரோன் அந்நாட்டு அரசியல் கட்சித் தலைவர்களை சந்–தித்து வருகின்றார் என தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, ஜனாபதி இமானுவல் மெக்ரோன் இடதுசாரி, நடுநிலை மற்றும் வலதுசாரிக் கட்சித் தலைவர்களை நேற்று முன்தினம் சந்தித்துள்ளார்.

அதன் போது, The NFP கட்சி, தனது கட்சியைச் சார்ந்த லூசி கஸ்டெட்ஸ் என்ற என்பவரை பிரதமர் வேட்பாளராக பரிந்துரைத்துள்ளது.

மேலும், பிரான்சின் அடுத்த பிரதமர் தெரிவிற்கு சேவியர் பெர்ட்ரான்ட், பெர்னார்ட் கேஸீவ்வ் ஆகியோரின் பெயர்களும் முன்வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், அந்நாட்டு ஊடகங்கள் பாரீஸ் புறநகர் மேயரான கரீம் பௌம்ரானே என்பவர் பிரதமராக வாய்ப்புள்ளதாக தெரிவித்துள்ளன.

எவ்வாறாயினும், பிரான்ஸ் நாட்டிற்கான பிரதர் விரைவில் தெரிவு செய்யப்படுவார் என குறிப்பிடப்படுகிறது.




# காசா போர் நிறுத்தத்தில் தாமதம்: லெபனான் எல்லையில் பதற்றம்

காசாவில் போர்நிறுத்தம் ஏற்படுத்தப்படாவிட்டால் இஸ்ரேலுக்கும் லெபனான் எல்லையில் மோதல்கள் அதிகரிக்கும் சாத்தியங்கள் உள்ளதாக சர்வதேச ஊடகமொன்று தெரிவித்துள்ளது.


குறிப்பாக, காசாவில் தற்போதைய மோதலைத் தீர்ப்பதற்குப் பதிலாக, இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு லெபனானுடன் ஒரு புதிய மோதலைத் தொடங்கலாம் என அந்த ஊடகத்தின் மூத்த அரசியல் ஆய்வாளர் அச்சம் வெளியிட்டுள்ளார்.

அத்துடன், காசாவில் இடம்பெற்று வரும் மோதல்கள் அண்டை பகுதிகளுக்கு பரவுவதைத் தடுக்க வேண்டிய தன் முக்கியத்துவத்தினை வலியுறுத்திய அவர் போர் நிறுத்தத்தின் அவசியம் குறித்து சர்வதேச சமூகத்தினரிடையே பரவலான உடன்பாடு இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், தற்போதைய மோதலில் போர் நிறுத்தத்தை அடைவதற்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு முக்கிய தடையாக இருப்பதாகவும் இஸ்ரேலில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்புகளின்படி, போர்க்காலத்தில் நெதன்யாகு தன்னை ஒரு வலிமையான, தீர்க்கமான தலைவராகக் காட்டிக் கொள்வதால் அவருக்கான அங்கீகாரம் மற்றும் புகழ் என்பவை அதிகரிப்பதாக தெரியவந்துள்ளது.

இதன் காரணமாக, “போர்நிறுத்தத்தை நோக்கிய முக்கிய முயற்சிகளை நெதன்யாகு எதிர்க்கக்கூடும், ஏனெனில் அது அரசியல் ரீதியாக அவருக்கு நன்மை பயக்கும்” என அவர் குறிப்பிட்டுள்ளார்.




# மன்னாரில் எலக்ட்ரிக் மோட்டார் சைக்கிள் விற்பனை நிலையம், காட்சி அறை திறப்பு

பொருளாதார நெருக்கடியில் மக்களின் போக்குவரத்தை இலகுவாக்கும் எலக்ட்ரிக் மோட்டார் சைக்கிள் விற்பனை நிலையம் மற்றும் காட்சி அறை மன்னார் நகரில் முதல் முறையாக கடந்த வியாழக் கிழமை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் மீன்பிடி மற்றும் விவசாயத்தை நம்பி வாழும் மக்களின் போக்குவரத்தை இலகுவாக்கும் வகையில் எலக்ட்ரானிக் மோட்டார் சைக்கிள் விற்பனை காட்சியரை வியாழக் கிழமை வைபவ ரீதியாக காலை 10 மணி அளவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் நகரில் 20 வருடங்களுக்கு மேலாக மோட்டார் சைக்கிள் விற்பனை சேவையை வழங்கும் மேசியா நிறுவனம். மக்களின் போக்குவரத்துக்காக வாகன விற்பனையில் ஈடுபட்டு வரும் நிலையில் தற்போதைய காலத்திற்கு ஏற்றவாறு மக்களின் பொருளாதார நெருக்கடியை கருத்தில் கொண்டு எலக்ட்ரானிக் மோட்டார் சைக்கிலை மன்னார் பகுதியில் அறிமுகப்படுத்தியுள்ளது.

சர்வதேச தரத்தை கொண்ட YADEA உற்பத்தி நிறுவனத்தின் மோட்டார் சைக்கிள் விற்பனை நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில், மன்னார் நகர் சின்ன கடை பிரதான வீதி பகுதியில் புதிய விற்பனை நிலையம் மற்றும் காட்சி அறை கொழும்பிலிருந்து வருகை தந்த YADEA மோட்டார் சைக்கிளின் இலங்கைக்கான விற்பனை முகாமையாளர் மற்றும் வடக்கு பிராந்திய முகாமையாளர். உட்பட மெசியா நிறுவனத்தின் உரிமையாளர் மற்றும் பணிப்பாளர் மற்றும் வர்த்தக பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர்.

















# யூனியன் அஷ்யூரன்ஸின் டிஜிட்டல் Clicklife Loyalty Rewards அறிமுகம்

யூனியன் அஷ்யூரன்ஸ் இலங்கையின் ஆயுள் காப்புறுதித் துறையில் மற்றுமொரு புரட்சிகரமான திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.

Clicklife App இன் டிஜிட்டல் Clicklife Loyalty Rewards ஐ அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சந்தையில் காணப்படும் இந்த வகையைச் சேர்ந்த முதலாவது திட்டமாக இது அமைந்திருப்பதுடன், அனைத்து இலங்கையர்களுக்கும் தமது நலனை மேம்படுத்திக் கொள்ள ஆதரவளிப்பது எனும் நிறுவனத்தின் நோக்கத்துக்கு பொருத்தமான வகையில் அமைந்துள்ளது.

தமது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், ஒவ்வொரு படியிலும் நிதிசார் ரீதியில் பாதுகாப்பைப் பெறவும், புத்தாக்கமான கட்டமைப்புகளை பயன்படுத்திய வண்ணமுள்ளது.

யூனியன் அஷ்யூரன்ஸின் புதிய டிஜிட்டல் வெகுமதித் திட்டத்தினூடாக, சகல வாடிக்கையாளர்களுக்கும் Clicklife App இனூடாக மில்லியன்கள் பெறுமதியான வெகுமதிகளை திரட்டிக் கொள்ள முடியும். இந்தத் திட்டம் Clicklife App இல் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், வாடிக்கையாளர்களுக்கு டிஜிட்டல் வெகுமதிகளை திரட்டி, அவற்றை 100 க்கும் அதிகமான விற்பனைப் பங்காளர் வலையமைப்பில் பயன்படுத்திக் கொள்ளும் வசதி வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பங்காளர்களில் சுப்பர் மார்க்கெட்கள் மற்றும் உணவங்கள் மற்றும் ஆடை விற்பனையகங்களும் அடங்கியுள்ளன.

நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, 2020 ஆம் ஆண்டில் தனது Clicklife App ஐ அறிமுகம் செய்திருந்ததனூடாக, ஆயுள் காப்புறுதித் துறையை மாற்றியமைக்கும் செயற்பாடுகளில் யூனியன் அஷ்யூரன்ஸ் முன்னிலையில் திகழ்கின்றது. இந்த App இனூடாக, பாவனையாளர் அனுபவங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளதுடன், பாவனையாளர் நலனை மேம்படுத்துவதில் புத்தாக்கமான பல உள்ளம்சங்களையும் கொண்டுள்ளது. தொழிற்துறையில் அறிமுகம் செய்யப்பட்ட பல புத்தாக்கங்களை Clicklife App தன்னகத்தே கொண்டுள்ளது, அதில் AI அடிப்படையில் இயங்கும் கலோரி கணிப்பான் மற்றும் முழுமையான டிஜிட்டல் வெகுமதித் திட்டம் போன்றன அடங்கியுள்ளன.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி மஹேன் குணரட்ன கருத்துத் தெரிவிக்கையில்,

"எமது புத்தாக்கமான செயற்பாடுகளினூடாக அனைத்து இலங்கையர்களினதும்நலனைமேம்படுத்துவதற்காக எம்மை ஆழமாக அர்ப்பணித்துள்ளோம். ஆயுள் காப்புறுதியை அதிகளவு அணுகக்கூடியதாகவும், பாவனையாளர்களுக்கு நட்பானதாக அமைந்திருக்கச் செய்வதிலும் நாம் பெருமளவில் கவனம் செலுத்துவதுடன், வாடிக்கையாளர்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் பரிபூரண பாதுகாப்பை வழங்குகின்றோம். இதற்கு Clicklife App மையமாக அமைந்திருப்பதுடன், வாடிக்கையாளர்களுக்கு தமது ஆயுள் காப்புறுதியை நிர்வகித்துக் கொள்ள வலுவூட்டுவதுடன், பிரத்தியேகமான அனுகூலங்களை அனுபவிக்கவும் ஏதுவாக அமைந்துள்ளது. எமது டிஜிட்டல் Clicklife Loyalty Rewards திட்டத்தினூடாக, செயற்திறன் நிறைந்த வாழ்க்கை முறைகளுக்கு வெகுமதிகள் வழங்கப்படுவதுடன், பரிபூரண நலனுக்கு ஆதரவளிக்கப்பட்டு, வாடிக்கையாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தாரின் நிதிசார் பாதுகாப்பை உறுதி செய்வதாகவும் அமைந்துள்ளது." -என்றார்.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம தகவல் அதிகாரி ஹர்ஷ சேனநாயக்க கருத்துத் தெரிவிக்கையில்,

"ஆயுள் காப்புறுதித் துறையில் டிஜிட்டல் மேம்படுத்தல்களை முன்னெடுப்பதில் யூனியன் அஷ்யூரன்ஸ் எப்போதும் முன்னிலையில் திகழ்கின்றது. Clicklife App இன் டிஜிட்டல் Clicklife Loyalty Rewards திட்டத்தின் அறிமுகம் என்பது, எமது நடத்தை மாற்றப் பயணத்தில் வலுச்சேர்க்கும் முக்கிய மைல்கல்லாக அமைந்துள்ளது. புத்தாக்கத்தை பரவச் செய்வதற்கான எமது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தி, வாடிக்கையாளர் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதில் தொடர்ச்சியாக கவனம் செலுத்தவும், அவர்கள் எப்போதும் உலகத் தரம் வாய்ந்த தீர்வுகளை பெற்றுக் கொள்வதை உறுதி செய்வதையும் இந்தத் திட்டம் உறுதி செய்கின்றது." - என்றார்.